திருவள்ளுவர் ஆண்டு 2037

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 101 பகுதி : 6 ஜூலை -07

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை—1.

ஜூலை-07

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி	தலைவர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,	செயலாளர்
திரு. இரா குருசாமி பி.ஏ.,	உறுப்பினர்
திரு. டாக்டர். ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S.,	உறுப்பினர்
திரு. ச. பரங்குன்றம் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திரு. இரா. கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி பி.இ.,	உறுப்பினர்
திரு. எஸ்.எம். நாகராசன் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. பி. வீரணன்	உறுப்பினர்
திரு. மா. ச. மாரியப்பமுரளி பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்

கல்லூரிக் குழு

திரு. டாக்டர்.ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S.,	தலைவர்
திரு. இரா.குருசாமி பி.ஏ.,	செயலாளர்
திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,	உறுப்பினர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	உறுப்பினர்
திரு. ச. பரங்குன்றம் பி.ஏ.,	உறுப்பினர்
திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ.,	உறுப்பினர்
திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்.,	உறுப்பினர்
இராஜா. திரு. டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி	உறுப்பினர்
திரு. இரா. கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச. மாரியப்பமுரளி பி.ஏ., பி.எல்.,	உறுப்பினர்
டாக்டர். திரு. க. சின்னப்பா பிஎச்.டி., முதல்வர்	உறுப்பினர்
டாக்டர். திருமதி. வீ. காந்திமதி பிஎச்.டி., இணைப்பேராசிரியை	உறுப்பினர்
டாக்டர். திருமதி. செ. தனலெட்சுமி பிஎச்.டி., இணைப்பேராசிரியை, பல்கலைக்கழக உறுப்பினர்	உறுப்பினர்
டாக்டர். திரு. இரா. மோகன் எம்.ஏ., பிஎச்.டி.,	உறுப்பினர்

செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 101
பகுதி : 7
ஜூலை 2007

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2037

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 6	

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–625 001.

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–625 001.

பொருளடக்கம்

இதழ்மணம் 250

பெருமையும் சிறுமையும்! 251

- கவிவேந்தர் கா. வேழவேந்தன்

நாவலில் மொழி : 252
சொல்வதும் சொல்லாமல் விடுவதும்
ராஜம் கிருஷ்ணனின் "வேருக்கு நீர்"

- து. மூர்த்தி

பாற்கர சேதுபதி நான்மணிமாலை 278

ஆசிரியர் : சிவசம்புப் புலவர்
விளக்கவுரை ஆசிரியர் : பேராசிரியர். இரா. சதாசிவம்

இதழ்மணம்

கவிவேந்தர் கா. வேழவேந்தன் தமிழ்மணம் கமழத் தமிழ் மரபு வழி சிந்திக்கும் அரிய சிந்தனையாளர். "**பெருமையும் சிறுமையும்**" என்னும் கவிதை இன்றைய மனிதன் வாழ்க்கையில் கடைப்பிடியாகக் கொள்ள வேண்டிய அரிய உண்மைகள் அடங்கிய கவிதைச் செல்வம் எனலாம். செல்வத்தைப் பேணி பாதுகாத்துப் பயன்படுத்துதல் போல இக்கவிதையும் வாழ்க்கையில் பேணுதற்குரியதாகும். "**நந்தம் சேய்களெலாம் தமிழ் கற்றல் பெருமை; சென்று தேம்கூமொழி (ஆங்கிலம்) காலபிடித்தல் சிறுமை**" எனக் கவிஞர் கூறுவது இன்றைய தமிழனின் அறியாமையையும் தமிழினத்தின் எதிர்காலச் சிதைவையும் எச்சரிப்பதாகும். தமிழினம் விழிபெற்று உய்வதாகுக.

நான்காம் தமிழ்சங்கத்தைத் தோற்றுவித்து தம் உயிரினும் மேலாகத் தமிழ் நலம் சிறக்கப் பேணி வளர்த்த பாண்டித்துரைத் தேவரின் உயிர் அனைய தம்பியும் நண்பனுமாக விளங்கியவர் "**பாற்கரசேதுபதி**"யாவார். பாற்கரசேதுபதி தம் தமிழ்ப் பணியைப் பாண்டித்துரைத்தேவர் மூலமாக நிறைவு செய்தார்கள்; இருவரும் இயல் இசை விற்பனர்கள். இசைத் தமிழ் சாகித்யங்கள் படைத்தவர்கள்; இசைத் தமிழ் அரங்கேறியவர்கள்; இயற்றமிழ் மேடையில் தலைமையேற்றவர்கள்.

ஓங்கிய புகழ் பாற்கரசேதுபதி குறித்து யாழ்ப்பாணம் சிவசம்புப் புலவர் "**பாற்கர சேதுபதி நான்மணிமாலை**" என்னும் நூலை இரா. ராகவையங்கார் உள்ளிட்ட அறிஞர் அவையில் அரங்கேற்றியுள்ளார்; அந்நூல் உரையின்றி மூலம் மட்டும் புலவரேறு இளங்குமரன் அவர்களிடமிருந்து கிடைத்தது. அதற்குரிய விளக்க உரையுடன் செந்தமிழில் வெளியிடுகிறோம். கல்வி வல்லார்கள் குறைநிறைகளைக் குறித்து எழுதினால் நலம் சிறக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

* * *

பெருமையும்
சிறுமையும்!

கை உயர்த்திக் கொடையளித்தல் பெருமை; கூனிக்
கையேந்தி இரப்பதுதான் சிறுமை! நம்மை
வைதவரை மன்னித்தல் பெருமை; அந்த
வம்பர்களைத் தண்டித்தல் சிறுமை! வென்றால்
தை, தை என்றே குதிக்காமை பெருமை; கர்வம்
தலைக்கேறி ஆடுவதோ சிறுமை! வாழ்வில்
ஐயமெலாம் கேட்டறிதல் பெருமை; ஈங்கே
அரைகுடமாய்த் தளும்புவதோ சிறுமை என்பேன்!

வறுமையிலும் துவளாமை பெருமை; ஆனால்
வாய்ப்புக்கு விலைபோதல் சிறுமை! தீய
வெறிகண்டால் கொதித்தெழுதல் பெருமை; கண்டும்
வெறும்புழுவாய்ப் பதுங்குவதோ சிறுமை! தூய
நெறிவாழ்வுப் பயணந்தான் பெருமை; காணும்
நேர்மையிலாக் குறுக்குவழி சிறுமை! வீட்டில்
முறைப்பெற்றோர் தமைப்பேணல் பெருமை; கொண்டு
முதியோரின் மனைசேர்த்தல் சிறுமை என்பேன்!

ஓய்வின்றிப் பிறர்க்குதவல் பெருமை; நீண்ட
ஒதிமரமாய்க் கிடப்பதுதான் சிறுமை! ஈன்ற
தாய்மண்ணைக் காதலித்தல் பெருமை; ஓடித்
தாயகத்தை மறந்திடுதல் சிறுமை! நந்தம்
சேய்களெலாம் தமிழ்கற்றல் பெருமை; சென்று
தேம்சுமொழி கால்பிடித்தல் சிறுமை! நாளும்
தாய்த்தமிழை வாய்பேசல் பெருமை; பாழும்
'தமிங்கல'த்தில் மூழ்குவதோ சிறுமை என்பேன்!

நாவலில் மொழி : சொல்வதும் சொல்லாமல் விடுவதும்
ராஜம் கிருஷ்ணனின் "வேருக்கு நீர்"

சென்ற இதழ் தொடர்ச்சி

—து. மூர்த்தி
வார்சா பல்கலைக்கழகம், போலந்து

"அந்த நாள்களில் தலைவர்கள் தியாகத்தால் உருவாவதும் 'இந்த நாள்களில்' வெறும் விளம்பரங்களால் உருவாக்கப்படுவதும்" (16) குறித்த ராஜத்தின் கவலை உண்மையானதும் நேர்மையானதும் ஆகும். 1961–71 ஆம் ஆண்டுகளின் இடைப்பட்ட காலங்களில் இந்தியாவின் அரசியல் தலைகீழாக மாறுகிறது; காங்கிரஸ் சிதைகிறது; மாநிலங்களில் 'அனைத்திந்திய' தன்மை மாறி மாநிலக் கட்சிகள் ஆட்சி அமைக்கின்றன; தமிழ்நாட்டில் 1967–இல் ஆட்சியைக் கைப்பற்றிய திராவிட முன்னேற்றக் கழகம் 1971–இல் சுதந்திரக் கட்சியின் துணையின்றி – ராஜாஜியை ஒதுக்கித் தள்ளி – மிகப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கிறது ; உலக அளவில் கம்யூனிச இயக்கத்தில் ஏற்பட்ட கொள்கை வேற்றுமைகள் வங்காளத்திலும் பட்னாவிலும் வலிமையான அதிர்வுகளை உண்டாக்க தமிழ்நாட்டில் அதில் எதிரொலிகள் கேட்கின்றன. தமிழ்நாட்டில் வயநாட்டில்' இருந்து நாவலைத் தொடங்க வேண்டியிருக்கிறது.

கலகலத்துப்போன காங்கிரசைக் தட்டியெழுப்ப முடியாமல் திணறும் அரசியல் சூழலில், மாறிவரும் சமூக உள்ளடக்கத்தை அறிவுபூர்வமாகக் காணவிரும்பாமல் கண் மூடியும், மாற்று வழிகளைச் சொல்லமுடியாமலும், கம்யூனிசம் வெற்றிபெற்று விடுமோ என்ற அச்சத்தில் பெண்ணுரிமைப் படைப்பாளி ராஜத்திற்குக் கிடைத்த ஒரே புகலிடம் காந்தியும் அகிம்சையுமாகும். இதை நேரடியாகச் சொல்லவரும்போது சமுதாய நடப்புகளால் இடர்ப்படும் நாவலாசிரியர்க்கு வன்முறை = பலாத்காரம் = கம்யூனிசம் = இரத்தவெறி என்று மொழியை ஆள வேண்டியிருக்கிறது.

> **"முதலில் உலகிலேயே பலாத்காரத்தில் மட்டும் நம்பிக்கை கொண்ட ஒரு கட்சி ஜனநாயகமுறைத் தேர்தலில் பதவிக்கு வந்திருப்பது இந்த நாட்டில்தான்..."(16)**

என இந்திய ஜனநாயகத்தைப் பெருமைப்படுத்துவதில் நமக்கு வேறுபாடு இல்லை. ஆனால், 1957 இலேயே ஆட்சிக்கு வந்த கேரள கம்யூனிஸ்ட் கட்சியை, ஜனநாயகத்துக்குப் புறம்பாகக் கவிழ்த்த காங்கிரசின் பலாத்காரம் பற்றி எங்கும் எந்தக் குறிப்பும் இல்லை.

அதுமட்டுமல்ல, 'பலாத்காரத்தில் மட்டும் நம்பிக்கை கொண்ட கட்சி' என்பதை கோடானுகோடி மக்கள் மீண்டும் மீண்டும் தவிடுபொடியாக்கினர் (1967) என்பதுதான் சொல்லப்படாமல் விடப்பட்டதும் ஆகும். ராஜத்தின் தாக்குமொழி எப்போதும் உண்மைகளைத் (facts) தான் பலவீனப்படுத்துகிறது.

> "கையில் பணமுள்ளவன் மற்றவர்களை விலைக்கு வாங்கிச் சாதித்துக் கொள்கிறான். மிருக வலிமைகொண்டவன் பணக்காரனை வெருட்டி மிரட்டி வன்முறையில் அவனை விலைக்கு வாங்குகிறான்" (17)

'விலைக்கு வாங்கி சாதித்துக் கொள்வது' மிருக வலிமை என்றோ வன்முறை என்றோ வெருட்டிமிரட்டி என்றோ சொல்லப்படவே இல்லை.

'மிருக வலிமை கொண்டவன்' என்பவன் யார் என்பதற்கும் விளக்கம் இல்லை. பணக்காரனின் ஒரு பிரிவே மிருக வலிமை பெறமுடியும் என்பதோ, ஏழை எளிய மக்கள் அந்த வலிமையைப் பெறவே முடியாது என்பதோ ராஜத்தின் மொழியில் எங்கும் இல்லை. மக்கள் சக்தி ஒன்று திரண்டு, வெகுமக்கள் புரட்சியாக எழும்போது அது 'மிருகவலிமை' என்று நாசூக்காகவும், எந்த விதத்திலும் பணக்காரன் மிரண்டுவிடக்கூடாது என்று வெளிப்படையாகவும் ராஜத்தின் மொழி இயங்குகிறது.

சென்னைக்கு வரும் யமுனா, தொடர்வண்டியில், உயர்நிலைப் பள்ளியில் தனக்குக் கீழ்வகுப்பில் படித்த அருணா என்பவளைச் சந்திக்கிறாள். அண்ணாதுரைக்கு (அறிஞர் அண்ணா) நெருங்கிய குடும்பம்; அருணா எனப் பெயர் வைத்ததே அவர்தான். ரோஜா–மான்–சிங்கம்–ராஜகுமாரி என யமுனாவை அறிமுகப்படுத்தும் அகிம்சை ராஜம் தி.மு.க. பிரச்சாரகியை,

> "...உதட்டருகில் ஒரு மச்சம். கவர்ச்சி நிறைந்த கண்கள்! அவள் பேசும்போது கண்கள் இணைந்து பாவங்களை வெளியிடுகின்றன... மார்புப் பள்ளத்தில் அழகாக ஒரு உதயசூரியன் பதக்கம் இழைகிறது..."(61)

என அறிமுகப்படுத்துகிறார். ஒரு மல்லிகையோ, புறாவோ ராஜத்தின் கண்களுக்குத் தட்டுப்படவில்லை மார்புப்பள்ளத்தில் இழையும் உதய

சூரியன்தான் அருணாவை அறிமுகப்படுத்தும் எல்லா இடங்களிலும் அவர் கண்ணில் தட்டுப்படுகிறது! பெண்ணுரிமைப் போராளி ராஜத்தின் கண்கள்தான் சொல்லப்படாத மொழியாகும்.

"பிரச்சாரம் என்றால் என்ன பேசுவாய்?"

"பேச்சு மட்டுமில்லை. பேச்சு, பாட்டு இரண்டும் கலந்து *கதாகாலட்சேபம்* மாதிரி..."

"இதற்கு மாதச் சம்பளம் உண்டா?"

"இல்லே. ஒரு நிகழ்ச்சிக்கு இத்தனைன்னு *பங்குபோட்டுக் கொள்வோம்*..."

"நாங்கன்னா யாரு?"

"*பக்க வாத்தியக்காரர்*களெல்லாம்தான்..."

தி.மு.க.வின் பிரச்சாரம் என்றால் 'கதாகாலட்சேபம்' தான். காலட்சேபம் மாதச் சம்பளம், பங்குபோடு, பக்கவாத்தியக்காரர் முதலான சொற்களின் பின்னால் உள்ள நடப்பில் உள்ள கிண்டல்தான் சொல்லப்படாத சேதி! கீழ்ச்சாதியர் ஆடிய நடனம் தேவதாசிகளின் சதிர்க்கச்சேரி என இகழப்பட்டது. அதே நடனம் நடராசர் சிலைக்கு முன்னால் மேடையில் ஆடப்பட்டபோது பரதநாட்டியமாகிவிட்டது.

கட்சிகளின் பிரச்சாரம் குறித்து விவாதம் தொடங்குகிறது. 1967இல் ராஜாஜியின் கூட்டுடன் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அண்ணா மறைந்த பின்னால் 1971 இல், இராஜாஜியை ஒதுக்கித் தள்ளி மிகப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தது. இந்த பின்னணியில் ராஜத்தின் 'தேர்தல்-பிரச்சாரம்' குறித்த மொழியை நாம் காணவேண்டும்.

ராஜத்தின் நாயகி யமுனா விவாதத்தைத் தொடங்குகிறார்; அருணா அதற்குப் பதில் கூறுகிறாள்.

"தேர்தல் சமயத்தில்தான் பிரச்சாரம் செய்வீங்கன்னு நினைச்சேன். எப்போதுமா பிரச்சாரம்..."

"பிரச்சாரம் ஒரு கட்சி நிலைச்சு நிற்க உயிர்த்தண்ணி சோறு மாதிரி. அது பதவியில் இருந்தாலும் தேவை இல்லாட்டியும் தேவை. தேர்தல் இல்லாத காலத்தில்தான் அவசியம் தேவை"

"அப்ப, பொய்யான பிரச்சாரத்தினால் கூட ஒரு கட்சி பதவிக்கு வந்துவிடலாம், இல்லையா?"

"ஏ, குறும்பு? பொய்ப்பிரச்சாரம் எதற்குச் செய்ய வேண்டுமாம்? பொய்ப் பிரச்சாரத்தில் எப்படி வரமுடியும்? நம் மக்கள் முட்டாள்களா? இந்தக் கட்சி பதவிக்கு வருவதற்கு மக்கள் எல்லோரும், இதற்கு முன் இருபது வருஷ ஆட்சியில் தங்களுக்கு அடிப்படைத் தேவை கூடக் கிடைக்கவில்லைன்னு புரிஞ்சுகிட்டதுதான் காரணம்..."

"யமுனாவுக்கு "இப்போது அடிப்படைத் தேவைகள் கிடைக்கின்றனவா?" என்று கேட்க ஆசைதான். அவள் கிடைக்கிறது என்றுதான் சொல்வாள். இல்லை என்பதைத் தன்னால் நிரூபிக்க முடியாது". (62–63)

இந்த 'மொழியைக்' கவனமாக ஆராய வேண்டும்.

பேசப்படும் தேர்தல் 1967இல் நடைபெற்றது; நாவல் எழுதப்பட்ட காலம் 1972. காங்கிரஸ்–தி.மு.க. முதலான கட்சிகளின் கொள்கை வலிமை, இழிவு பற்றி இங்கே கட்டுரையாளர் எதையும் ஆராய இடம் இல்லை. இந்திய அரசியல், கம்யூனிசம், வன்முறை, காந்தியம், காங்கிரஸ் பிளவு எனப் பரக்கப்பேசும் ராஜம், 1967இல் இந்தியா முழுக்க ஏற்பட்டிருந்த அரசியல் மாற்றங்கள் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருந்த மொழி வழிப்பட்ட தேசிய உணர்ச்சியின் எழுச்சி என எதையும் கணக்கில் எடுக்காமல் அல்லது அவற்றை அறவே அறியாதவர்போல, தி.மு.க. ஆட்சிக்கு வந்தது "பொய்ப்பிரச்சாரத்தினால்தான்" எனத் துணிந்து கூறியிருப்பதுதான் மொழி அரசியல் ஆகும். கம்யூனிஸ்ட் கட்சி கேரளாவில் ஆட்சிக்கு வந்தால் அது ஜனநாயகத்தின் வெற்றி. தி.மு.க. ஆட்சிக்கு வந்ததோ பொய்ப் பிரச்சாரத்தின் வெற்றி! இவற்றின் பின்னால் நின்ற கோடிக்கணக்கான மக்கள் பற்றி ராஜத்தின் கவலை எந்த மொழியிலும் இல்லை. தி.மு.க.வைப் பற்றிப் பேசும்போதெல்லாம் விமர்சனமற்ற தாக்குமொழி! காங்கிரஸ்–சுதந்திர கட்சி காந்தி பற்றிப் பேசும்போதெல்லாம் விமர்சிக்கவே விரும்பாத தாக்காமொழி! மேலே கண்ட மொழியை மேலோட்டமாக ஆராயும்போது, அருணாவின் மொழியில் தி.மு.க. ஆதரவு போன்ற பிரம்மை தோன்றும் நுணுகி

ஆராயும்போதுதான் ராஜம் என்ற பிரம்மா எதைப் பிரம்மிக்க விரும்புகிறார் எனப் புரியும்.

காந்தியம்பற்றி இளம் உள்ளங்களில் பதிய வைக்க – பிரச்சாரம் செய்ய – சென்னைக்கு வரும் யமுனா, "செந்தாழை நிறமுள்ள அந்தணனான" யூத் காங்கிரஸ் லீடர் இந்துநாத்தால் வரவேற்கப்படுகிறாள். அரசியல் பற்றிய தன் கருத்துகளை அவனிடம் கூறுகிறாள்.

> "நீங்கள் நினைப்பதுபோல் என் எண்ணங்களில் பொதுக்கூட்டங்களும் தலைமைப் பதவியும் கொஞ்சமும் கிடையாது. உண்மையைச் சொல்லப்போனால் நான் தப்பித் தவறிக் கூட அரசியல் பக்கமே போகவிரும்பவில்லை". (68)

பொதுக்கூட்டங்கள், தலைமைப் பதவி, அவதூறுகள், அடுக்குமொழி அலங்காரங்கள், சொற்களே ஆயுதங்கள் முதலான மூட்டைகளை, அரங்குகளை அரசியல் (69) அறிவாக நாமும்தான் எண்ணவில்லை. ஆனால் காந்தியப் பிரச்சாரம், காங்கிரஸ் பிளவுக்கான அனுதாபம், கம்யூனிச எதிர்ப்பு, புரட்சியையும் தனிமனிதப் பயங்கரச் செயல்களையும் இணைத்துக் குழப்புதல் முதலானவற்றைத் தீவிரமான அரசியல் என்று கூற அரசியலைப் பற்றிய பொது அறிவே போதுமானது.

கம்யூனிச, தி.மு.க. பிரச்சாரம் செய்த இலக்கியங்கள் எல்லாம் கலையழகற்ற மூன்றாம் தரமான பிரச்சாரக் குப்பைகள் என ஒதுக்கப்பட்டன; ஆனால் கம்யூனிச எதிர்ப்பு, ஸ்டாலின்எதிர்ப்பு, தி.மு.க. எதிர்ப்பு முதலானவை கலையழகு மிக்க ஒளிவெள்ளம் பாயும் கலைப்படைப்புகள் எனத் தழுவப்பட்டன. இந்த ஒதுக்குதலும் தழுவுதலும்தான் அரசியல். இது இலக்கிய விமர்சனம் என்றாலும், அரசியல் விளக்கம் என்றாலும் ஒரே மாதிரியாக–பாணியிலேயே அமைகிறது. காந்தி, சர்வோதயம், அகிம்சை என்ற பெயரால் மக்கள் எதிர்ப்பு அரசியல் கொலு செய்கிறது.

நாவலில் / கலைப் படைப்பில் காணப்படும் கருதுமுறை 'point of view' என்பதை உள்வாங்குதலில் தேர்வு 'Choice of perception' என்பார் சார்த்தர் (1974, p.14). இதை இக்கட்டுரையாளர் உள்வாங்குதலின் அரசியல் politics of perception - எனக்

குறிப்பிடுகிறார்.

தன் நாயகியின் உருவாக்கமே சமகால அரசியல் நிகழ்ச்சிகளால் ஏற்பட்டது எனக் கூறியுள்ள ராஜம் அந்த நாயகி யமுனாவை 'தப்பித் தவறிக் கூட அரசியல் பக்கமே போக விரும்பவில்லை' எனப் பேசவைத்திருப்பதன் அரசியல்தான் நாவல் மொழியின் சொல்லப்படாத சேதியாகும்.

> "உயர் பண்புகளுடைய பெண் ஒருத்தியின் மனசில் கற்புநெறி எப்படி வேரூன்றியிருக்குமோ, அப்படித் தீர்மானமாக, அரசியல் பதவிகளைச் சாராத பொறுப்புக்குரியவளாகவே அவள் தன்னை வளர்த்துக் கொண்டிருக்கிறாள்".(69)

பெண்ணுரிமைப் போராளியான ராஜத்தின் இந்த மொழி அவளுடைய அரசியல் தெளிவை–புரிதலை வெளிப்படையாகப் பேசிவிடுகிறது[4].

நாவலின் மொழி வழியாகச் செய்யப்படும் சொல்லாடல் 'negative' நாவலாசிரியனின் 'மனசாடலே' 'taking position'. எவ்வளவுதான் திறமையாக மொழியைக் கையாண்டு தன் மனசாடலை மறைத்தாலும், மொழி, படைப்பாளரையும் ஏமாற்றிவிட்டு, படைப்பாளியைக் காட்டிக்கொடுத்து விடும்.

இந்தியாவில் மீண்டும் அகிம்சையை – அகிம்சைப் புரட்சியைக் கொண்டுவரத் துடிக்கும்–தவிக்கும் படைப்பாளி ராஜம் தன்னை அறியாமல் தன்னை அறியத்தரும் இடம் நாவலில் வந்து சேர்கிறது.

அடிப்படையில் இந்த நாவல் அகிம்சைப் புரட்சிக்கும் கம்யூனிசப் (இம்சை) புரட்சிக்கும் இடையே நடக்கும் கருத்துப் பரப்பலில் அகிம்சை–காந்தியம் பக்கத்தில் வெளிப்படையாக நிற்கிறது. இதைப் பற்றிய ஆராய்ச்சி இந்தக் கட்டுரையின் நோக்கத்திற்கும் எல்லைக்கும் அப்பாற்பட்டது. இந்த நாவலில் மதம், இந்து–முஸ்லீம் பிரச்சனை என்பன அடிப்படைக் கதைப்பின்னலாகவோ ஒரு கதைக்கூறாகவோ கருதப்படவோ சொல்லப்படவோ இல்லை.

ஆனால் இந்துமதம், முஸ்லீம் பற்றிய குறிப்புகள் இரண்டு இடங்களிலும் ஆர்.எஸ்.எஸ். பற்றிய குறிப்பு ஓர் இடத்திலும் இடம் பெற்றுள்ளன. அவை பற்றிய மொழியே நம் ஆய்வுக்கு உரியது.

யமுனா சென்னையில் 'சுடர்ப்பொறிகள்' அமைப்பினர் ஏற்பாடு செய்த ஒரு கூட்டத்தில் பேசும்போது இந்துமதம் பற்றிய ஒரு குறிப்பு வருகிறது.

> "காந்தியடிகள் எந்த இலட்சியத்தையும் புதிதாகத் தோற்றுவிக்க வில்லை. அலட்சியமாக நழுவவிட்டதை எடுத்துக் கொடுத்தார். இந்தியச் சமுதாயம் இன்றும் நிலைத்து நிற்கக் காரணமானவையே அந்த இலட்சியங்கள்தாம். நாட்டில் வேறு புதிய புதிய சமயங்களும் கொள்கைகளும் மோதவந்தும் கூட, சத்தியம், அகிம்சை, அன்பு ஆகிய நெறிகளின் அடிப்படையில் உயர்ந்து நிற்கும் ஆன்மீக வாழ்வு என்ற தத்துவத்தில் நோக்கத்தில், எல்லாச் சமயங்களும் ஒன்றே என்று நிலை கண்டதனாலேயே இந்தச் சமுதாயம் இன்னும் புதுமை அழியாமல் நிலைத்து நிற்கிறது...."(105)

'நழுவவிட்டது', 'மோதவந்து', 'ஆன்மிகவாழ்வு', 'இந்தியச் சமுதாயம்' இவை சொல்லப்பட்ட மொழிகள். சொல்லப்படாதது எது? இதைப் படிக்கும்போது எல்லா மதங்களையும் சாடுவது போன்ற ஒரு தோற்றம் ஏற்படுகிறது. ஆனால் உண்மை அதுவன்று!

'இந்தச் சமுதாயம்' என்பதற்குப் பதிலீடாக 'இந்துச் சமுதாயம்' என்ற சொல்லைக் கொண்டு படித்தால் சொல்லப்படாத சேதி விளங்கிவிடும். புதிய சமயங்கள் (பௌத்த, சமண, கிறித்துவ, இஸ்லாமிய...) மோத வந்தவை. காந்தியோ நழுவ விட்டதை எடுத்துக் கொடுத்தவர். அது எது? 'ஆன்மீக வாழ்வு' கண்ட 'இந்துச் சமுதாயம்' என்பதே இயல்பு மொழி! 'இந்தச் சமுதாயம்' என்பது மறைமொழி! இந்த மோதலை நாம் வேறு இடங்களில் கையாளப்பட்டுள்ள மொழி வழியாகக் காண்போம்.

வங்கத்தின் தலைநகரான கல்கத்தாவை விட்டு, யமுனா தன் கணவனுடன் பீகாரின் தலைநகரான பட்னாவுக்குச் செல்கிறாள். கல்கத்தா நகரம் பற்றிய நடைபாதை, வாகன நெரிசல், கிடங்குகள், மனிதப் பெருக்கம் பற்றிய வர்ணனைகள் அமைந்துள்ளன. நெருக்கமாகக் கடைகள் அமைந்துள்ள ஒரு பகுதியைக் கடந்து செல்கிறார்கள்.

"நெருக்கமாகக் கடைகள், முஸ்லீம் மக்கள் வாழும் பகுதி போலும்
ஒரு பொறி தெறித்தால், ஊரையே சூறையாடித் தீர்க்கும்
காற்று சேரும் பகுதி இதுதானோ?" (162)

படைப்பாளி ராஜம் வெளியே வந்து விழும் இடம் இதுதான். கதையில் கருவிலோ, பின்னலிலோ எந்த இடத்திலும் மதம் ஒரு கூறாக எடுத்துக் கொள்ளப்படாத நிலையில், ஒருநகரவர்ணனையில், முன்பின் தொடர்பு எதுவும் இன்றி, 'போத்' தென்று 'போதுக்'கென்று 'முஸ்லீம் மக்கள்' மீது நெருப்பு உமிழப்பட்டு விடுகிறது. இந்துச் சமுதாயம் என்று பெயர் சொல்லப்படாமல் 'ஆன்மீக வாழ்வால்' அது சரண் செய்யப்படுகிறது. தேவையே இன்றி முஸ்லீம் மக்கள் மீது இந்தப் பழிமொழி போர்த்தப்படுகிறது. ஒரு இடத்தில் 'மறைமொழி'யைப் பயன்படுத்தினால் இன்னொரு இடத்தில் 'பழிமொழி' வந்தே தீரும் இதை வேறு ஒரு இடத்திலும் காணலாம்.

பட்னாவில்தான் குடியிருக்கும் பகுதிக்கு அருகே உள்ள மாந்தோப்பில் ராம் ராம், சீதாராம்..... ஜே ஜே சீதாராம் பஜனை நடக்கிறது. சம்பா என்ற ஏழைப்பெண்ணுடன் அதைக் காணச் செல்லுகிறாள் யமுனா. கொடிய வறுமையில் வாடினாலும் ஏழை எளிய மக்கள் பக்திப் பரவசமாகி விடுவது வருணிக்கப்படுகிறது. இந்த வருணனை,

"பாரத சமுதாயத்தை மாய்த்து விடாமல் வைத்திருக்கும் கண்ணுக்குத் தெரியாத ஊற்றுக்கண்கள், இந்த அறியாமையிலும் இறை நம்பிக்கையிலும் தெளிவாகின்றன" (240)

என்று முடிகிறது. சொல்லப்பட்டதும், சொல்லப்படாததும் வெளிப்படை. இதை "ஆன்மீகத்தை குறியாகக் கொண்ட பக்தி" (241) எனக் கொண்டாடுகிறார் ராஜம்.

பூஜை நடக்கும் நேரம் திடீரென்று ஒரு குண்டு வெடிக்கிறது. பிரசாதத்தை வாங்கிக் கொண்டும் வாங்காமலும் மக்கள் ஓடுகிறார்கள். அகிம்சை யமுனாவும் ஏழைப்பெண் சம்பாவுடன் அந்த இடத்தை விட்டு வெளியேறுகிறாள். கதையில் இதுவரை கம்யூனிச வன்முறையே பேசப்பட்டு வந்துள்ளது; இந்தக் கண்ணோட்டத்தில் முஸ்லீம் பற்றிய குறிப்பு இது வரை இல்லை. கதையில் முதன்முதலாகவெடிக்கும் குண்டு இது. சம்பா கேட்கிறாள்; யமுனா

விடை கூறுகிறாள்:

> "அதான் ... முன்ன ஒருநாள் புன்புன் பாலத்தில் ஒரு குண்டுவெடிச்சு பையன் ஒருவன் செத்துப்போனான். முஸல்மான்கள்தான் இப்படிப் பண்ணுகிறார்களா? மாஜி?"
>
> "முஸல்மான்களா! யமுனா திகைக்கிறாள். "சே! சே! அவங்கல்லாம் இல்ல, இது யாரோ?" (245)

யமுனாவின் விடையில் 'முஸ்லீம்கள் மீது பழி இல்லை' என்பது போன்ற ஒரு தோற்றம் காட்டப்படுவதென்னவோ உண்மைதான். ஆனால் முன்பின் தொடர்பின்றி முஸ்லீம்கள் இங்கு இழுக்கப்பட்டதே தவறு இதுவே சொல்லப்படாத மொழி அரசியல். இதன் முடிச்சு பின்னால் அவிழ்கிறது. 'இந்து மதம்' பற்றி வரும் இடங்கள் ஆன்மீகம் என ஆராதிக்கப்படுவதும், தொடர்பே இன்றி முஸ்லீம்கள் பழிக்காளாவதும் வெளிப்படை!

நாவல் முடிவுக்கு வருகிறது. மருத்துவமனையில் இருந்து தன் வீட்டுக்கு ரிக்ஷாவில் ஏறிச் செல்கிறாள் யமுனா. பல்வேறு சுவரொட்டிகள் – சுவர் எழுத்துகள்:

> "முதலாளித்துவம் மனிதனை அடிமையாக்கும்
> பொதுவுடைமை மனிதனை மிருகமாக்கும்
> இரண்டிலும் சேராதீர் மக்களே"

இப்படி ஓர் எச்சரிக்கை கறுப்புமையால் சுவர்களில்.

> "கம்யூனிஸ்ட் நாயே, நாட்டைக் கெடுக்காமல் ஓடிப்போ!
> முதலாளித்துவ மாமாவின் கைப்பொம்மையா ஆகாதே!
> மக்களுக்காக மக்கள் நடத்தும் அரசுக்குப் புரட்சி!" (259)

மேற்கண்ட இருவித சுவரெழுத்துகள், நாவலில் எங்கும் இல்லாதபடி முதன்முறையாகத் தடித்த எழுத்துகளில் உள்ளன. முதலாளித்துவமும் பொதுவுடைமையும் ஒருசேர தாக்கப்படுகிறது; கம்யூனிசமும் முதலாளித்துவ மாமாவின் கைப்பொம்மை எனக் கூறப்படுகிறது! குழப்புவது போன்ற ஒரு மொழி–நாவல் முடிவில்! அல்ல, அல்லவே அல்ல! முதலாளித்துவம்–பொதுவுடைமை இரண்டையும் தாக்கும் முதல்சுவர் எழுத்து, ஆர்.எஸ் எஸ். சின் அன்றைய இந்து தேசிய முழக்கம்! பின்னது, ஆட்சியிலுள்ள கம்யூனிஸ்ட்களைக் குறித்து

நக்சல்பாரிகளின் விமர்சனம் இந்த இரண்டையும் ஒருசேர வைத்துப் படிப்பவனைக் குழப்புவதன்று நோக்கம்! சொல்லப்படாத அரசியலாம் ஆர்.எஸ்.எஸ்சின் தெளிவு! சார்பு!

நாவல் முடிகிறது. ரிக்ஷாவில் செல்லும் யமுனாவுக்கு "ஸப்கோ ஸன்மதி தே பகவான்" என்று காந்தி பிரார்த்தனை செய்த மைதானம் தான். தான் கடந்து செல்லும் பகுதி என்பது நினைவுக்கு வருகிறது. இவ்வாறு பிரார்த்தனை—மதக்கலவரம் ஏற்பட்ட—நடந்த ஆண்டு 1947 என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (260). இந்த மண்ணைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொள்ள வேண்டும் போலிருக்கவே, யமுனா ரிக்ஷாவை விட்டுக் கீழே இறங்குகிறாள். சில காட்சிகள் அவள் கண்ணில் படுகின்றன.

> "மைதானத்துள் மஞ்சள் கொடிகளைப் பிடித்துக் கொண்டு அரைநிஜாரும் முண்டா பனியன்களுமாக ஒரு இளைஞர் அணிவகுப்பு நடக்கிறது. இது ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த படை; இன்னொரு அரசியல் கட்சியைப் பயமுறுத்த, இங்கே படைப்பயிற்சியை நடத்துகிறது" (26)

படைப்பாளி ராஜத்தின் 'வேருக்கு நீர்' காட்டும் 'அரசியல் மொழிப்' பகுதி இத்துடன் முடிகிறது; படைப்பாளியைப் போலவே கட்டுரையாசிரியரும் இந்தப் பகுதியை எந்தவித விமர்சனமும் இன்றி முடிக்கிறார். நாவலின் அரசியல் மொழியில் சொல்லப்படாதவையே, தெளிவான கட்டளைமொழியாய் வெளிப்பட்டுள்ளதோ? (இப்படிக் கேள்வி கேட்டு நிறுத்துவது ராஜத்தின் பாணிதான்!)

V

கம்யூனிசம்-வன்முறை-பற்றிய மொழி

1973 ஆம் ஆண்டின், இந்திய சாகித்திய அகாதமி விருது 'வேருக்கு நீர்' என்ற இந்நாவலுக்கு அளிக்கப்பெற்றது. இந்தியா முழுமையும் ஓரளவிற்கும் தமிழ்நாட்டில் பேரளவிற்கும் அறியப்பெற்ற சிறந்த நாவலாசிரியையான ராஜம் கிருஷ்ணன் 1975இல் சோவியத்லாந்து—நேருபரிசை, 'வளைக்கரம்' என்ற நாவலுக்காகப் பெற்றார். கம்யூனிசம் சோசலிசம் ஆட்சியில் இருந்தபோதே சோவியத் பூமிக்குச் சென்று வந்தவர். இந்திய அளவில் அரசியலை

மையப்படுத்தி இதுவரை இவர் எழுதிய ஒரே நாவல் வேருக்கு நீர் மட்டுமே!

இருபதாம் நூற்றாண்டின் அறுபதுகளில்–குறிப்பாக அதன் பிற்பகுதியில் உலகம் முழுக்க அரசியலில் தலைகீழ் மாற்றங்கள் ஏற்பட்டன. அதன் இந்தியத் தாக்கமும் பேரளவினதாகும். மூன்றாம் உலகப்போர் ஏற்பட்டுவிடுமோ என்ற சூழல்; கம்யூனிச இயக்கத்தில் பெரும்பிளவு; காங்கிரசின் வீழ்ச்சியும் பிளவும்; மாநிலங்களில் மொழித் தேசிய வழிப்பட்ட இயக்கங்களின் வளர்ச்சி; கம்யூனிசக் கட்சியின் தேர்தல் வெற்றிகள்; இந்தியக் கம்யூனிசத்திலும் பாராளுமன்ற வழியா, ஆயுதப் பேராட்ட வழியா என்ற கொள்கை அடிப்படையில் பிளவுகள்; வங்கம், பீகார், ஆந்திரா, கேரளா மற்றும் தமிழ்நாட்டில் அதன் பேரொலிகள். இவற்றிற்கிடையே இந்திய தேசக் கட்டமைப்பைத் தமிழ்நாட்டில் இருந்து நாவலாசிரியர்கள் எப்படிப் பார்த்தார்கள் என்பதுதான், இலக்கிய வரலாற்று வழித் தமிழ்நாட்டைப் பற்றிய ஆய்வில் எழுப்பப்பட வேண்டிய ஆய்வு வினா!

1967–71–ற்கு இடையே ஏற்பட்ட அரசியல் மாற்றங்களில் குறைந்தபட்ச ஜனநாயக உணர்வும், பொறுப்புணர்ச்சியும் உள்ள எந்தப் படைப்பாளியும் காங்கிரசைத் தூக்கிப்பிடிக்க–தூக்கி நிறுத்த முடியாத நிலையிலேயே தான் இருந்தார். ஆனால் காங்கிரசுக்கு மாற்றுச் சொல்லவேண்டிய நிலை ஏற்பட்டபோதுதான், பலரின் உண்மை முகங்கள் வெளிப்பட்டன. மக்கள் மாற்றைத்தேடி அலைந்தனர். இந்தியா முழுமையிலும் அலுத்துப்போன மக்களின் மனம் காங்கிரஸ் அல்லாத மாநில இயக்கங்களையும், கம்யூனிசத்தையும் நாடிச்சென்றது. குறிப்பாக இளமை வேட்கை நக்சல்பாரி இயக்கத்தையே நாடிச் சென்றது.

ஆயுத வழியா, வாக்குச் சீட்டு வழியா என்பதற்கு அப்பால், ஏதேனும் ஒரு வழியில் கம்யூனிசம் இந்தியாவில் வேர் கொண்டு வெற்றி பெற்றுவிடுமோ என்ற அச்சம், பல்வேறு படைப்பாளிகளை, காந்திய–அகிம்சை முகமூடியோடு வீதிக்குக் கொண்டு வந்துவிட்டது. முன்னணி எழுத்தாளர் பலரும் அறிவின் நியாயங்கள் அனைத்தையும் புறந்தள்ளி கம்யூனிசம் என்றாலே அது ஒரு கொலை வெறித் தத்துவம் என்றே பிரச்சாரம் செய்யத் தலைப்பட்டனர். காங்கிரசுக்கு மாற்றாகக் காங்கிரசே மாற்று என்ற அரசியல் பித்தலாட்டத்தைக்

காந்திய வழியில் 'இம்சைக் கம்யூனிசத்தின்' எதிராக அகிம்சையை நாவலாக்கினர். ராஜத்தின் வேருக்கு நீர், ர.சு. நல்லபெருமாளின் கல்லுக்கள் ஈரம், கி. ராஜேந்திரனின் காலச்சக்கரம், 'அகிலனின் எரிமலை' எனக் கம்யூனிசத்தை வெட்டிச் சாய்க்கப் பிரச்சார நாவல் பீரங்கிகள் வெளிப்பட்டன. இவை அனைத்திற்கும் ஏதோ ஒரு அகிலஇந்தியப் பரிசும் கிட்டின. அந்த வகையில் வேருக்கு–அகிம்சைக்கு–நீரூற்றப் புறப்பட்ட ராஜத்தின் நாவல் மொழியில், கம்யூனிசம் = பயங்கரவாதம் = வன்முறை எனக் காட்டப்பட்டது. இந்தக் கட்டுரை எந்த மொழியை அலசுகிறது.

சுதிர் என்னும் சுதிரன் பணக்காரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த அறிவாளி. ஆனால் கம்யூனிசம் பக்கம் சென்றுவிட்ட, ஆனால் அகிம்சை யமுனாவால் கல்யாணம் ஆனபின்பும் காதலிக்கப்பட்ட, வன்முறையாளன் ஆவான். இவன் வழியாகவே கம்யூனிசம் என்றாலே அது வன்முறை–கும்பல்–தனிமனித சாகச வெறி எனப்படைத்துக் காட்டப்படுகிறது.

வறுமையில் தவிப்பவர், எதிர்காலத்தில் நம்பிக்கை இல்லாதவர், சிறுபிள்ளைத் தனமான சாகசங்களில் ஈடுபாடு கொண்டவர்கள், கட்சிக்கு அடிமையானவர்கள் வழி விலகியவர்கள் ஆகிய இவர்கள்தான் கம்யூனிசப் புரட்சியில் – வன்முறைப் புரட்சியில் நம்பிக்கை வைப்பார்கள் என ராஜத்தின் நாவல் (25, 31, 34, 40, 108, 154, 157, 218, 220...) வெளிப்படையாக மொழிகிறது.

> "வசதி இல்லாத குடும்பங்களில் வாழ்க்கை ஏமாற்றமாகப் போகும்போது இப்படி வன்முறைப் புரட்சிக் கொள்கைகளின் இறங்குவது நடக்கக்கூடிய தென்றெண்ணினேன். இப்ப, அளவு மீறி வசதி வாய்ப்புகள் இருக்கும்போது, எந்த வகையிலேனும் விறுவிறுப்புத் தேட, இப்படியும் ஒரு கொள்கை வலையில் விழமுடியும்னு புரிகிறது." (31)

இந்த மொழியில் சொல்லப்பட்டுள்ள சேதிகளில் நிறைவடையா ராஜத்தின் மனம் வெளிப்படையாகக் கம்யூனிஸ்ட் கட்சிகளைப் பற்றி விமர்சிக்கிறது.

> "இம்மாதிரி விறுவிறுப்பா புத்தி தீட்சண்யமாக இருக்கும் இளசுகளை, கட்சி வலைக்குள் கொள்கைகளைக் காட்டி இழுக்க,

> பெரிய தலைகளெல்லாம் அன்றாடம் டீயில் ஒருதுளி கஞ்சாவையோ அபினையோ கூடக் கலந்து கொடுப்பார்களாமே? தச்சு ராஜீவெல்லாம் சொல்லறதுக, எனக்கென்ன புரிகிறது?" (31–32)

ராஜத்தின் பரிதாபம் 'எனக்கென்ன புரிகிறது?' என்பதில்தான் வெளிப்படுகிறது.

இரத்தத்தில் தோய்ந்த ஐந்து விரல் முத்திரைகள் உள்ள துண்டுப் பிரசுரங்கள்; "ஓர் ஓரத்தில் சட்டிமுகம் இடுங்கிய கண்களுடன் சிரிக்கிறது" இரத்தவெறிக்கு ஒன்றுமறியாத மக்களைத் தூண்டிவிடுதல் எளியரை அச்சுறுத்தல், தொண்டையைக் கிழித்தல், குடலை எடுத்தல் (34, 39, 40) இவை எல்லாம்தான் கம்யூனிசப் புரட்சியாகக் காட்டப்படுகிறது. ஆனால் இந்தப் புரட்சியைப் பற்றி பேசும் – ஆதரிக்கும் சுதிரனின் சொற்கள் யமுனாவுக்கு "சம்பங்கிப் பூவிலிருந்து பொன்பொறிகள் சிதறினாற்போல இருக்கிறது" (41). வன்முறையை ஆதரித்தாலும் மேல்சாதிக் காதலன் அல்லவா?

> "கதிரின் தந்தை, ஆலமரமாய்ப் பரவிநிற்கும் வர்த்தக நிறுவனத்தைத் தோற்றுவித்த முதல்வர். அந்தக் காலத்தில் கதர் உடுத்தி காந்தி பக்தரானாலும் தொழில் வளர்ச்சிக்கு அந்த இலட்சியங்கள் முட்டுக்கட்டைப் போடாதவாறு பார்த்துக் கொள்ளத்தானே வேண்டும்? அரசோடு இணங்கி, இணங்க வைத்து, ஆளுங்கட்சிக்கு அள்ளிக்கொடுத்து சலுகைகளைப் பெற்றுப் பல்கிப் பெருகினார் என்று சொல்லலாம்" (84).

தொழில் முதலாளிகள் பற்றிய ராஜத்தின் பாசமொழிகள் இவை! கொடும் சுரண்டல் 'ஆலமரமாகி' விட்டது; கதர்வேடம் முட்டுக்கட்டைப் போடாதவாறு பார்த்துக் கொள்ளப்படுகிறது இலஞ்சம் அள்ளிக்கொடுக்கும் வள்ளல் தன்மையாகி விடுகிறது.

சென்னைக்குக் காந்தியம் பற்றியும் சர்வோதயம் பற்றியும் சொற்பொழிவாற்றிவரும் அகிம்சை யமுனா, தன் பெரியப்பா, சுதந்திராக் கட்சி சந்தானமையரு வீட்டில் தங்குகிறாள். சாதித்திமிர், பெண்களை இழிவு செய்யும் பேச்சு, தீண்டாமையை வெளிப்படையாக ஆதரித்தல் ஆகிய அனைத்துப் பண்புகளையும் கொண்ட சந்தானமையரு கடுமையாக அல்ல, லேசாகக் கூட விமர்சிக்கப்படுவதில்லை.

யமுனாவுக்கு, "சுடர்ப்பொறிகள் என்ற தலைப்பு, முற்போக்குக் குழுவினர் என்று ஒரு முகவரி. மக்கள் முற்போக்கு இலக்கியப் பொறிகள் சிதறுமிடமாம்" என்ற அறிமுகத்துடன் கூட்டத்தில் பேச வருமாறு அழைப்பு வருகிறது. இதைக் கண்டுவிட்ட சந்தானமையரு, "இந்தச் சுடர்ப்பொறி, தீப்பந்தமெல்லாம் கத்தி கபடாக்காரங்க கூட்டம்" எனக் (92) கண்டிக்கிறார் கடுதாசியைக் கிழித்தெறியச் சொல்கிறார்.

> "இது அலர்ஜியா? இந்தக் கார்டில் கட்சிச் சின்ன வாடை கூட இல்லையே? ஆனால் இம்மாதிரியான இலக்கியம் சமுதாயம் என்ற போர்வைகளைப் போர்த்துக் கொண்டுதான் அந்த அறிவியல்வாதிகள் கட்சி வலையை விரிக்கிறார்கள் என்பதை அவள் அறிந்திருக்கிறாள்" (93)

சந்தானமையரின் பேச்சு வெறும் அலர்ஜி; அறிவியல்வாதிகள் விரிப்பது கட்சி வலை.

கூட்ட வாசல் "வாயிலில் கார்களாக நிற்பதிலிருந்து உயர்படிக்காரர்கள் பலர் கூட்டத்திற்கு வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது" "அந்த நாளில் உங்கப்பா என்னுடைய காலேஜ்மேட்" (99) என அறிமுகம் செய்துகொள்ளும் கூட்டத்தலைவர். யமுனாவின் சொற்பொழிவும், பார்வையாளர் வினாக்களும், யமுனாவின் விடைகளுமாக (101–107) முடியும் கூட்டம் பற்றியல்ல ஆய்வு! எல்லா இடங்களிலும் புரட்சியின் சார்பாளர்கள் மரியாதை தெரியாதவர்களாகவும் (44) குதர்க்கம் பேசுபவர்களாகவுமே காட்டப்படுகின்றனர்.

யமுனா பேசுகிறாள் "தேனின் இனிமையும் ஆலயமணியின் நாதமும் குலவுகின்றன. அது உள்ளத்தில் இருந்து ஒலிப்பூக்களைக் கொண்டு வந்து" (101) கேட்பவரின் உள்ளங்களை நிறைக்கிறது. ஒரு ஆலயப் பூஜை அறிமுகமாகிறது. கேள்வி கேட்பவர்களை 'கிருதா மீசைக்காரன்', 'குறும்புக்காரன்', 'கறுவல் முகம்' என அறிமுகப்படுத்தும் ராஜம் "கேள்விகளைக் கேட்பவர்கள், மான்போல் நிற்கும் ஒருத்தியைத் தாக்க வந்திருக்கும் காட்டெருதுகளைப் போல் கேள்விகளைத் தொடுக்கின்றனர்" (103) என்கிறார். "ரோஜா, இல்லை... மான், இல்லை ... சிங்கம்..., இல்லை ராஜகுமாரி" (7) என அறிமுகமாகும் யமுனா, இந்த இடத்தில் சிங்கமாகாமல் மானாகி விடுகிறாள் போல இருக்கிறது.

"நீங்க கேள்விக்கெல்லாம் பதில் சொல்லப் போறேளோன்னோ" என்று கேட்கும் கூட்டத் தலைவரின் பேச்சில் அவர் மேல்சாதி என்பது மட்டுமே வெளியாகிறது. கூட்டம் கலாட்டாவாகிறது.

"வயசுப்பொண்ணாக லட்சணமாகக் கல்யாணம் கார்த்திகைன்னு குடும்பத்தில் இருந்து பேர் சொல்ல மாட்டாயோ? இப்படி இதுக நார் நாராகக் கிழிச்சிப் போட வந்து மாட்டிப்பியோ?" (106)

என்று இரங்குகிறார் கூட்டத் தலைவர். கூட்டத்தில் முத்தாய்ப்பான கேள்விகளைச் சுதிரன்தான் கேட்கிறான். "அவன்தான் சுதிர்குமார். கீழ் வெண்மணிக்கப்புறம் ஆளே தலைமறைவா இருந்தாப்பல. இன்னிக்கு வந்திருக்கிறான்" என்று சுதிரன் பற்றிய இந்துநாத்'தின் குறிப்புடன் கூட்டச் செய்தி முடிகிறது. இங்கே கீழ் வெண்மணி எதற்காகக் கொண்டுவரப்பட வேண்டும் என்பது கட்டுரையாளரின் அறிவுக்கு எட்டவில்லை. ராஜம் கிருஷ்ணனைப் பெரிதும் கொண்டாடும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர்தான். மார்க்சிஸ்ட் உட்பட இதற்கு விடை கூறவேண்டும்[5].

இந்துநாத்துடன் கூட்டத்திற்குப் போய்வந்ததைத் தவறாக எடுத்துக் கொண்டு, அவர்கள் இருவரும் லவ் அண்ட் ஹவ்டு மேக் இட் என்ற திரைப்படத்திற்குத்தான் போய்விட்டு வந்தார்கள் எனச் சாதிக்க முயலும் நீரு பற்றி ஒரு விமர்சனம் "பொதுவுடைமைக் கோட்பாடுள்ள நாட்டில் சந்தேகிக்கப்படும் நபர்கள், ஏதேனும் குற்றத்தை, அவர்கள் சொல்கிறபடி ஒப்புக்கொள்கிறவரை சித்திரவதை செய்வார்களா இவள் அந்த வகையைச் சார்ந்தவள்" (114)

பயன்படுத்தப்பட்டுள்ள மொழியில் வியப்புக்குரியது எதுவும் இல்லை சோவியத் லாண்டு பரிசு கிடைத்ததுதான் வியப்பு!

"நாசப்புரட்சியின் நம்பிக்கை வைத்த கட்சியும் ஜனநாயக முறையில் ஆட்சிப் பொறுப்பைப் பற்றலாம் என்று சொன்ன நமக்கு அவர்கள் சவால் விடுத்திருக்கிறார்கள். இப்போது இதற்குள்ளிருந்தே இதைத் தகர்ப்பதைப் பற்றி வெளிப்படையாகப் பேசுகிறார்கள். உள்ளத்தில் சோரம் போவதையே எண்ணிக் கொண்டு திருமணப் போர்வைக்குள் புகுவது போல மனசுக்குள் சுகபோகங்களையே கருதிக் கொண்டு துறவாடை மேற்கொள்வதுபோல் மக்களுக்குத் தொண்டன் என்று சொல்லிக்

கொண்டு பதவியைக் கைப்பற்றிக் கொள்வது போல் ...” (222)

கம்யூனிசம் பற்றிய ராஜத்தின் முத்தாய்ப்பு அரசியல்மொழி இத்தோடு முடிகிறது. காங்கிரசு பற்றிப் பேசும்போது புகழ்மொழி, இரக்கமொழி; தி.மு.க. பற்றிப் பேசும்போது கிண்டல்மொழி, தாக்குமொழி; கம்யூனிசம் பற்றிப் பேசும்போது பழிமொழி, இழிமொழி! தாக்கப்படுவது கட்சியா, தத்துவமா, தனிநபரா எனத் தெரிந்து கொள்ளப்பட முடியாதபடியான மறைமொழி!

VI

சாதி (துரை), காதல் (சுதிர்) பற்றிய மொழி

ராஜம் அவர்களின் மொழிபற்றிய ஆய்வு அவருடை சமகால 'அரசியல் கண்ணோட்டம்' பற்றிய திறனாய்வாகவே அமைந்துவிட்டது வியப்பன்று; சமகால இந்திய – தமிழக அரசியல் சூழல்நிலையில் மிகத்தெறிப்பாக கம்யூனிச எதிர்ப்பு, மொழிவழித் தேசிய எழுச்சியைக் கொச்சைப்படுத்துதல், புரட்சியையும் தனிமனித பயங்கரவாதத்தையும் வன்முறை என்ற பெயரால் குழப்புதல் ஆகியவற்றின் பக்கம் நிற்கும் ராஜம், உள்ளார எதன்பக்கம் நிற்கிறார் என்பதைக் கண்டறிய முடியாதபடிக்கு மொழியைக் கையாண்டிருப்பதுதான் மொழி அரசியல் ஆகும். ஆனால் மொழி அவரையும் ஏமாற்றிவிட்டு, வெளிப்படையாக வெளிப்பட்டு விடுவதுதான் அரசியல்மொழி ஆகும்.

ராஜத்'தின் 'சாதீ—காதல்' மொழிக்குள் புகுவதற்கு முன்பு, பல்வேறு இலக்கியப் பரிசுக் குன்றுகளின் மேல் உயர்ந்து நின்றாலும் அவரது சிந்தனை முறைமை எப்படித் தரைமட்டத்திலேயே இருக்கிறது என்பதைக் காண்போம்.

யமுனாவின் தாய் ருக்மணி அம்மை, நோயுற்றுச் சோர்ந்துபோன தன் கணவனைப் பற்றி எண்ணிப் பார்க்கிறாள்.

> ”அகிம்சை நெறியில் அளவற்ற நம்பிக்கை வைத்த அவர், அந்த நம்பிக்கைக்குப் பேரிடியாய்ச் சம்பவங்கள் நிகழ்ந்ததுமே சோர்ந்து போனார். அவருடைய உடல்நலிவு, வெறும் உடல் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல. உள்ளத்தில் விழுந்த அடிகளே அவரைப் படுக்கையில் வீழ்த்தியிருக்கின்றன. சீனத் தாக்குதல் நிகழ்ந்தபோது, நிராயுதபாணிகளாய் எல்லையில் அணிநிற்க ஒரு

படையைத் திரட்ட வேண்டும் என்று எல்லாத் தலைவர்களுக்கும் எழுதினார். வறட்சியைப் பொருட்படுத்தாமல் ஓடி ஓடித் தலைவர்களைச் சந்தித்து அகிம்சை நெறியோடு, தாக்கியவனை எதிர்நோக்கி நிற்க வேண்டும் என்று வலியுறுத்தினார். அப்படி நிராயுத பாணிகளை வன்முறையில் வீழ்த்தினால் உலகை அது அசைக்கக் கூடும் என்று நம்பினார். முயற்சி விழலுக்கிறைத்த நீராயிற்று. அப்போதே ஒரு நள்ளிரவில் அதிர்ச்சி கண்டு கைகால் சுவாதீனம் இழந்தவர்தாம்" (123–124)

இதைப் படிக்கும்போது அதிர்ச்சி அடைந்து கைகால் இழக்காமல் இருந்தால் சரி; ராஜம் போன்றவர்களின் இப்படிப்பட்ட தூய காந்திய பக்தி மக்களிடையே தங்களை மகாமுனிவர்களாக காட்டிக்கொள்ளப் பயன்படும் கபட வேடம் ஆகும். இவர்கள் மனமறிந்து உணர்வு பூர்வமாகப் பொய் சொல்கிறார்கள்; தங்கள் மொழி வன்மையால் மக்களின் எதிர்ப்பு உணர்ச்சியை–எழுச்சியைக் குழப்ப முயலுகிறார்கள்.

அகிம்சையில் இவ்வளவு பற்று–பக்தி உண்மையிலேயே ராஜத்திற்கு இருந்திருக்குமென்றால், பெண்ணடிமையை, தீண்டாமையை, சாதிப் பிளவை நியாயப்படுத்திப் பேசும் பெரியப்பா சந்தானமையரோ, கற்பழிக்க முயற்சி செய்த இந்துநாத்தோ (அந்தணனோ), யமுனாவின் மொழியால் கண்டிக்கப்பட்டிருக்க வேண்டும்; ஆனால் அவ்வாறு கண்டிக்கப்படாததோடு பறையன் துரையைவிட–கணவனை விட மேலானவர்களாக மொழியப்படுகிறார்கள் (206).

"காந்திஜியைக் கடைசியாகச் சந்தித்தாளே மார்க்கரெட்டு வொயிட் என்ற பத்திரிகைக்காரி, அவள், "அணுகுண்டுக்கு முன் உங்கள் அகிம்சை என்ன செய்ய முடியும்? அதை அதே வகையில் தானே எதிர்க்க வேணும்" என்று கேட்டாளாம். அப்போது, "அகிம்சைத் தத்துவத்தில் என் நம்பிக்கை அளவு கடந்தது. அந்த நம்பிக்கை என்ற மகாசக்தியே, உயர அணுகுண்டைப்போட வந்த எதிரிக்கு என் இதயத்தை எட்டவைக்கும்" என்றாராம்."

காந்தியின் அகிம்சையின்படி நாடு போயிருந்தால் சீனாவின் எல்லை இன்றைய கன்னியாகுமரியாக இருந்திருக்கும்; உலக வரைபடத்தில்

அமெரிக்கா மட்டுமே இருந்திருக்கும். காந்தியின் அகிம்சையில் பரவசப்பட்டுப் போகும் ராஜம் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தை வேறொரு நாசகாரக் 'கட்சியைப் பயமுறுத்த' படைப்பயிற்சி நடத்தும் இயக்கம் எனச் செல்லமாகத் தட்டிக் கொடுத்துவிட்டுச் செல்கிறார்.(260)

ராஜத்தின் இந்த அரசியல் பின்னணியை ஆழமாக மனதில் கொண்டால்தான், சாதி–துரை பற்றிய அவருடைய தாக்குமொழியை அதன் உட்பொருளை நன்றாக உணரமுடியும்.

'வாழ்நாளெல்லாம் படிய வைத்தாலும் படிய வைக்கவே முடியாதவன் சேரியில் பிறந்தவன் துரை'. ராஜத்தின் பாத்திரப் படைப்புப் படியே, ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து, அரசின் உதவியால் படித்து முன்னேறி, பொறியாளனாகிய துரை, தன்னை எப்போதும் இலட்சியவாதியாகக் காட்டிக் கொள்ளாததோடு சாதாரண–சாமானிய மனிதர்களைப் போல உண்டு, உடுத்து, களித்து வாழவே ஆசைப்படுகிறான்; வெளிப்படையாகவும் கூறுகிறான் (144, 147,160,235). தன் ஆசைக் காதலன் சுதிர் பயங்கரவாதியாகி விட்டதும், துரையை மணக்க யமுனா இசைக்கிறாள்; தன் தாயிடம் கூறுகிறாள்.

> "துரையை மணந்து கொள்கிறேன். ஏனென்றால் வெளி உலகில் தன்னந் தனியே தலை நீட்டும்போது தற்காப்பு ஒரு பிரச்சனையாகிவிடுகிறது. நீங்கள் சொல்லும் ஆசைகள் தேவைகள் போன்ற நோக்கங்கள் இல்லாத வாழ்விலேதான் உண்மையைக் காணமுடியும். துரை அந்த வகையில் ஒத்தவர்தானே..." (135)

இந்த மொழி எதைச் சொல்லாமல் விடுகிறது. ஆம், அகிம்சை எவ்வளவு சுயநலமானது ஆணின்–பறையனின்–சம்மதமற்ற ஒரு திருமணம் ஒரு பெண்ணின் சுயநலத்திற்காக நியாயப்படுத்தப்படுகிறது.

திருமணத்திற்கு பின்பு படிய வைக்கவே முடியாதவனாக நாவலின் இரண்டாவது பக்கத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டுவிட்ட துரை, ஒரு அரக்கனைப் போலக் காட்டப்படுகிறான் (142, 171, 173, 179, 185, 202, 225). இப்படிக் காட்டப்படவில்லை என்றால், துரையைப் பற்றிய உச்சகட்டமான ராஜத்தின் மொழியை நியாயப்படுத்தவே முடியாது.

சாதாரண, அற்ப ஆசைகள் கொண்டவனாகக் காட்டப்பட்ட துரை, காந்தியம் பற்றி யமுனாவோடு விவாதிக்கும்போது கூறுகிறான்:

"...மனுஷன் வாய்க்கு ருசியாய்ச் சாப்பிடக்கூடாது! கண்ணுக்குக் குளிர்ச்சியாக உடுத்தக்கூடாது! எல்லாரும் பஞ்சப் பனாதைகளாகக் கப்பறை ஏந்தவேணும். மகாத்மா, மகாத்மாவாக அப்பத்தான் இருக்கமுடியும்னு உன் காந்தி சொல்லியிருக்காரு..."

கொதித்துக் கூறுகிறாள் யமுனா:

"நீங்களா இப்படிப் பேசறீங்க? நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்க. அந்த மாதிரி ஒருத்தர் இல்லேன்னா... நீங்க நீங்க..." நச்சுச் சொல் தெறித்து விடாமல் அவள் சட்டென்று விழுங்கிக் கொள்கிறாள்.." (210-211)

'சோற்றுக்கும் துணிக்கும் கப்பறை ஏந்திய கூட்டம், அரசு பதவி பெற்றதும் ஆடும் ஆட்டம்தான் என்ன?' என்பதுதான் சொல்லப்படாத சேதி![6]

தன் கதலன் சுதிரனின் கைகளைப் 'பெண்ணின் கைகளைப் போன்ற மென்மையானது' என (42) வருணிக்கும் யமுனா, அவனுடைய வன்முறை ஆதரவுப் பேச்சைக் கூட சண்பகப் பூக்கள் உதிர்வது போல (52) கற்பித்துக் கொள்கிறாள். யமுனாவைப் பற்றிய பிம்பம் எப்போதும் 'குத்துவிளக்காகக்' காட்டப்படுகிறது. (89, 127). குத்துவிளக்கு யமுனா, சண்பகப் பூ சுதிரனை எண்ணியே மாய்கிறாளா என துரை கேட்க, யமுனா பதில் கூறும் மொழியைப் பெண்ணியர்தான் விளக்கவேண்டும்.

> "நீ ... நீ ... அவனைக் காதலிச்ச இல்ல?"
> "அப்படியெல்லாம் பேசாதீங்க"
> மேலே, 'நான் யாரையும் எப்பவும் அப்படியெல்லாம் நினைச்சதில்லை' என்று சொல்லவந்தவளுக்கு ஏதோ ஒன்று தடையாகிறது. நாவை கடித்துக் கொள்கிறாள்" (160–161)

காந்திய உண்மைப்படி, 'ஆம்! காதலித்தேன்' என்பதுதான் அகிம்சை மொழி! 'ஏதோ ஒன்று தடையாகிறது' என்பதுதான் கபடமொழி!

தன் வண்மையான மொழியால் வாசகனை ஏமாற்ற முயலும் ராஜத்தை ஏமாற்றிவிட்டு மொழி வெளியேவந்து விழுந்துவிடுகிறது:

"ஒரு தோல்வியை மறைக்க இன்னொரு தோல்விக்குள் புகுந்துகொண்டாள்" (237).

சாதி வெறியைத் தூண்டித் தூக்கிப் பிடிக்கும் (73–99) பெரியப்பா சந்தானமையரு முன்னால் 'நச்சுச்சொல்' எதுவும் நினைவுக்கு வராததால், யமுனாவால், குனிந்த தலை நிமிராமல் நிற்பதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை! 'செந்தாழை நிறம் வாய்ந்த அந்தணனாகிய' இந்துநாத் உணவுவிடுதி ஒன்றில், தன் தோளில் கைபோட்டதும், நஞ்சுச்சொல் 'ஸ்கௌண்ட்ரல்... நான்சென்ஸ்' என்று ஆங்கிலத்தில் வெளிப்படுகிறது. (109–110)

திருமணமான பின்பு, பாட்னாவில், இந்துநாத்தை யமுனா சந்திக்கிறாள்.

> "நீ என்னமோ ஒன்றே குலம்னு பாடிண்டு ஏதோ கல்யாணம் பண்ணின்டேன்னு கேள்விப்பட்டேன்... இப்படிக் காடிப்பானையில் போய் விழுந்திருக்க வேண்டாம்... அதனால் தான் கீழ்ச்சாதி எல்லாம் துள்ளுகிறார்கள். இது கடைசியில் பெரியப்பாவுக்கு மனசு அறவே இல்லை" (196)

காந்திய யமுனா, "இதெல்லாம் தனிமனிதனின் அபிப்ராயங்களைப் பொறுத்தது..." என்று அகிம்சையாக மொழிகிறாள். "பெரியப்பா சொல்லி வருத்தப்பட்டார். இதுங்க வயசுக்கோளாறில் இப்படிச் செய்யறது சந்ததிக்குன்னா கேடாறதுன்னார்" என்னும் இந்துநாத்தை 'அமைதியாக' வீட்டுக்கு அழைத்து முகவரியைக் கொடுக்கிறாள்.

> "அப்போதைக்குச் சங்கடத்திலிருந்து தப்ப இதைச் சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்தபின் நிம்மதி அடியோடு குலைந்திருப்பதை உணர்ந்து தவிக்கிறாள்"(197).

சொல்லப்பட்ட மொழியில் இந்துநாத்தைக் கண்டிப்பது போன்ற தொனி இருக்கலாம். சொல்லப்படாத சேதியில், இந்துநாத் கூறுவதுதான் உண்மையோ என்ற கேள்வியால் நிம்மதி குலைவதுதான் மறைமொழி ஆகும். இந்துநாத், பெரியப்பா, துரை ஆகியோரை இறுதியாக ஒப்பிடுகிறாள் யமுனா.

> "இந்துநாத்தை விட துரை எந்தவகையில் முன்னேற்றமடைந்தவன். அவனுடைய இலட்சியங்களைக் கொண்டு அரசியல் களத்தின்

சிறு பகுதியேனும் தூய்மையாக்கப் போராட வாய்ப்பிருந்திருக்கும். பெரியப்பா பெரியவர். அப்படி அவரை உதறி எறிந்தாற்போல் பேசியிருக்க வேண்டாமோ? லட்சயங்களுக்கும் நடைமுறைகளுக்கும் இடையே எத்தனை வித்தியாசங்கள்" [206].

உணவு விடுதியில் தோள்மேல் கையும் கால் மேல் காலும் போட்ட, வீட்டுக்குள்ளே கற்பழிக்க முயன்ற (199) இந்துநாத்தான் துரையைவிட முன்னேற்றமடைந்தவனோ? இப்படிப்பட்டவனைக் கொண்டுதான் அரசியல் களத்தின் சிறுபகுதியையாவது தூய்மையாக்கி இருப்பாளோ? பெரியவர் பெரியப்பாவை உதறி எறிந்திருக்காமல் பறையன் துரையை விட்டுவிட்டு அந்தணன் இந்துநாத் தைத் திருமணம் செய்துகொண்டிருக்க வேண்டுமோ?

VII

பெண்ணுரிமைப் போராளியாகவும், சமூகச் சமவாழ்வில் தீரா வேட்கையுடையவராகவும் அறிமுகமான பாராட்டப்பெற்ற நாவலாசிரியர்தான் ராஜம் கிருஷ்ணன். கம்யூனிஸ்டு கட்சிகளின் முற்போக்கு இலக்கிய அரங்குகளில் முன்னிலை வகித்தவர்; அந்தக் கட்சிகளால் மிகவும் போற்றப்பெற்றவர். எளிமையானவர். ஆனால்...

இந்த 'ஆனால் ...' என்ற சொல்லுக்குத்தான் வரலாற்றிலும் திறனாய்விலும் எவ்வளவு பெரிய இடம் கிடைத்துவிடுகிறது? எப்படிப்பட்ட திருப்புமுனையாக அமைகிறது? இறுதியாக, ராஜம் கிருஷ்ணனின் நாவல்மொழி எதை அறிவிக்கிறது?

ராஜத்தின் எல்லா நாவல்களையும் ஒப்பிட்டு ஆராயாமல், இப்படி ஒரே ஒரு நாவலை வைத்து முடிவுக்கு வருவது கல்வி நேர்மைதானா என்ற வினா ஆராய்ச்சி நேர்மை வாய்ந்ததே வேறு ஏதேனும் ஒரு நாவலை வைத்தாவது இந்தக் கட்டுரையில் காட்டப்பட்டுள்ள மொழி அரசியலுக்கு எதிரான கருத்தை வேறு யாரேனும் ஆராய்ந்து காட்டட்டுமே என்பதுதான் கல்வி நேர்மையும் ஆராய்ச்சி ஒழுக்கமும், சமூகப் பொறுப்புணர்ச்சியும் வாய்ந்த விடை. அப்படியானால் ராஜத்தின் மொழி எதைப் பிரகடனப்படுத்துகிறது.?

1. சேரி மனிதன் எந்தக் காலத்திலும் சேரி மனிதனாகவே தான் இருப்பான்; அவனை மாற்றவே முடியாது.

2. மேல் சாதிப் பெண்கள் சீர்திருத்தம் என்ற பெயரால் கீழ்சாதியினரைத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது. அப்படிச் செய்தால் அரக்கன் துரையினால் அகிம்சை யமுனா சீரழிந்தது போலச் சீரழியத்தான் நேரிடும்.

3. வருணாசிரம் தர்மத்தில் நம்பிக்கை வாய்ந்த மேல்சாதிப் பெரியவர்களின் அறிவுரைகளை மேல்சாதிப் பெண்கள் தட்டவே–மீறவே கூடாது.

4. கொஞ்சம் அப்படியும் இப்படியும் ஒழுக்கக் கேடாக நடந்து கொண்டாலும் சேரியரை விட அந்தணரைத் திருமணம் செய்துகொள்வதே மேல்சாதிப் பெண்களுக்கு ஏற்றது.

5. பணக்காரக் குடும்பத்தில் பிறந்த அறிவாளியான பையன்கள், ஏதோ ஒரு இலட்சிய வெறியில் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சிகளோ, தேநீரில் அபின் கலந்து கொடுத்து இளைஞர்களை ஏமாற்றிக் கட்சியில் சேர்க்கும் நாசக்காரக் கும்பல்கள்!

6. தி.மு.க.–திராவிட இயக்கம் – போன்ற மாநிலக் கட்சிகளோ, தேர்தல் வழி நிற்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளோ, புரட்சிக் கட்சிகளோ எவ்வளவுதான் பிளவுபட்டாலும் சீரழிந்தாலும் காங்கிரசுக்கு மாற்றாக அவை ஏற்கப்படக்கூடாது.

7. காங்கிரசுக்கு மாற்றுதேட வேண்டும் என்றால், நாசகாரப் புரட்சிக் கட்சிகளை ஒழிக்க வேண்டும் என்றால், 'மைதானத்தில் அரை நிஜாரும் முண்டா பனியனுமாகப் படைப்பயிற்சி நடத்தும்' இயக்கமே ஒரே வழி

8. மேலே கூறிய எல்லாக் கருத்துகளையும் மறைத்துக்கொண்டு தெய்வீகமான ஒரு முகத்தைக் காட்டவேண்டும் என்றால் அதற்குக் காந்திய அகிம்சை ஒன்றே ஏற்ற வழி!

இந்தக் கட்டுரை இதோடு முடிக்கப்பட்டுவிட்டால் 'இலக்கியத் திறனாய்வு' என்ற நிலையில் பிழை ஏற்பட்டுவிடாது. ஆனால் சமூகப் பொறுப்புணர்ச்சி வாய்ந்த ஒரு கல்வியாளனின் கடமை இதோடு முடிந்துவிடுவதில்லை. ராஜம் கிருஷ்ணன் போன்ற பெண்ணுரிமைப் போராளிகள் ஏனிப்படிச் சிந்தித்திருக்கிறார்கள்?

இருபதாம் நூற்றாண்டின் அறுபதுகள், உலகம்–இந்தியா–தமிழ்நாடு ஆகிய அனைத்து பூமிப்பரப்பிலும் அரசியல் அதிர்வுகளை உண்டாக்கிய காலம் என்பது இந்தக் கட்டுரையின் பிற பக்கங்களில் சொல்லப்பட்டுள்ளது. தமிழ் இலக்கிய உலகம் இதை எப்படி அணுகியது என்பதுதான் கேள்வி. 1947க்கு முன்பு தமிழ்க் கவிதைதான் அரசியல் ஊடகமாக முன்னின்றது. நாவல் வலிமையான அரசியல் ஊடகமாக இல்லை. குறிப்பாக அறுபதுகளின் இறுதியில் (1962 சீன–இந்தியப்போர், 1964 கம்யூனிஸ்டு கட்சிகளில் பிளவு, 1965 இந்தி எதிர்ப்புப் போர், 1967 தி.மு.க. கம்யூனிஸ்டு கட்சிகளின் தேர்தல் வெற்றி, 1969 புரட்சி இயக்கங்களின் தோற்றம் பாதிப்பு, காங்கிரஸ் சிதைவு, 1971 மீண்டும் தி.மு.க. வெற்றி...) தமிழ் இலக்கிய அரசியலை விமர்சித்து மாற்றுச் சொல்ல முனைந்தது இலக்கியத்தின் பொறுப்புணர்ச்சி மறைக்கப்பட்டு–பாலியல் வக்கிரங்களை தீர்வாக வெளிப்படையாக முன் வைத்தது. இராம.சுந்தரம் இதை 1969 இலேயே அம்பலப்படுத்தினார் (1969, ப.121)

> "முதலாளித்துவ நாகரிகத்தின் தாக்குதல் தமிழ்ப் பத்திரிகைகளில் பலமாக விழுந்திருக்கிறது. பிற்போக்குச் சக்திகளின் கையில் பத்திரிகைகளும் பிற விளம்பரச் சாதனங்களும்சிக்கியுள்ளன. முற்போக்கின்குரலை அவர்களால் கேட்க முடியவில்லை. மக்கள் எழுச்சியின் வேகத்தை கிளர்ச்சியின் வீறாப்பை அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. தாங்கள் கட்டி வைத்துள்ள கட்டிடம் கலகலத்து விழுந்து விடுமோ என்று அஞ்சுகிறார்கள். ஆகவே மக்களைத் திசை திருப்பும் முயஎற்சியில் முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ளனர். அதற்காக மக்களுக்காக எழுதிய எழுத்தாளர்களைக் கூலிக்கு அமர்த்திக் கொள்கிறார்கள்... சுரண்டும் வர்க்கத்தின் கொடுமைக்கு ஆளாகி எதிர்காலமே இருளால் சூழப்பட்டுள்ள நிலைமையில் வாழ்வில் கசப்புணர்ச்சியையும் நம்பிக்கையின் மையையும் வளர்த்துக் கொண்டு திண்டாடும் இளைஞர்களை "இணைவிழைச்சு" அடிப்படையில் சந்தித்து அவர்களது நியாயமான கோரிக்கைகளையும் போராட்டங்களையும் உடைத்தெறியவும் முயலுகின்றனர். தங்களின் வேரூன்றிய நலனைக் காத்துக் கொள்வதற்காகச் செய்யப்படும் முயற்சி இது".

இராம. சுந்தரத்தின் கூற்று பத்திரிகை உலகம், தமிழ்க் கவிதை

உலகம் ஆகியவற்றிற்கு முழுக்க முழுக்க பொருந்துவதாகும். தமிழ் நாவல்களோ, சமகால அரசியலை வக்கிரப்பாலியல் கண்ணோட்டத்துடன் மட்டும் அணுகவில்லை; பிரபலமாகப் பெயர்பெற்ற முன்னணி எழுத்தாளர் பலரும் மக்களின் எழுச்சியை அடக்கி ஒடுக்க காந்தியக் கேடயத்தோடும் அகிம்சை வாளோடும் வெளிப்பட்டனர். இது அவர்தம் நோக்கத்தை வெற்றிபெறச் செய்ததோடு அவர்களுக்கு ஏராளமான பரிசுகளையும் வாரிக் குவித்தது. ஐம்பதுகளில் உருவான திராவிட இயக்க இளைய தலைமுறை அறுபதுகளின் இறுதியில் உதிரத் தொடங்கியதும், எழுபதுகளில் உருவான புதிய தலைமுறை கம்யூனிசத்தின் பக்கம் சென்று விடுமோ என்ற அகிம்சையின் அச்சம் வெற்றிபெற்ற வரலாறே தமிழ் நாவல் – அரசியல் நாவல் களத்தின் தடங்களாகும்.

> "நாட்டு விடுதலை என்ற இலட்சியத்துக்காக மட்டுமின்றி, மேன்மைக்காகவும் அரிய கொள்கைகளை வகுத்து, தியாகத்தின் அடிப்படையில் உருவாகி ஆலமரமாக வளர்ந்து மக்களிடையே பெருஞ்செல்வாக்கைப் பெற்றிருந்த அரசியல் கட்சி, வலது இடது என்று இரண்டு சாரிகளாகப் பிரிந்து உடைந்து வலுவிழந்தது. அரசியல் வானில் கொந்தளிப்பு மிகுந்தது! சமுதாய மேன்மைகளுக்காக எந்த எந்த அடிநிலைகளை உயரிய மதிப்போடு போற்றி வந்தோமோ, அந்த அடிநிலைகளே ஆட்டம் கண்டன. அரசியல் கட்சிகளின் மீது மக்கள் அவநம்பிக்கை கொள்ளும் வகையில் அவை செல்வாக்கு இழந்து, தனி மனிதர்களின் சண்டை சச்சரவுகளாகச் சீர்குலைந்தன". [2]

25–2–1980இல் இந்த நாவலுக்காக எழுதிய முன்னுரையில் ராஜம் கிருஷ்ணன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். ராஜத்தின் இந்த மொழி "புதிய புதிய அரசியல் எழுச்சிகளின் மீது, கட்சிகளின் மீது மக்கள் பெருநம்பிக்கை கொள்ளத் தொடங்கினர்". என்பதை மறைக்க அரும்பாடுபடுகிறது. 'நீங்கள் காந்தியக் கொள்கைகளை ஆதரிக்கவில்லையா அம்மா?" என்று என்னைப் பலர் இந்த நூலைப் படித்துக் கேட்டிருக்கின்றனர் (4) அப்பட்டமான வெளிப்படையான நேர்முகமான காந்திய, அகிம்சைப் பிரச்சாரமான இந்த நாவலுக்கு, ஏதோ அதற்கு எதிரான நாவலைப்போல ஒரு முகமூடியை அணிவிக்க முயற்சிக்கும் இந்த முன்னுரைப் பகுதிதான் நாவல் மொழியின்

தோலுரிக்கப்பட்ட அரசியலாகும். இந்த நாவலுக்கு 1973ஆம்ஆண்டிற்கான "மத்திய சாகித்ய அகாதமி நிறுவனப் பரிசுபெறும் சிறப்பும் கிடைத்தது" பெரும் வியப்புக்குரியது அன்று; ஞானபீடப் பரிசு கிடைக்காததுதான் மிகப்பெரும் வியப்புக்குரியதாகும்.

குறிப்புகள்

1. 'அரசியல் நாவல்' என்பதற்கும் 'நாவலின் அரசியல்' என்பதற்கும் நுட்பமான வேறுபாடுகள் இருந்தாலும் அவையாவும் அரசியல் நாவல் என்ற சொல்லாலேயே விளக்கப்பட்டுள்ளன; பொதுவாகக் கலைக்கும் சமூகத்திற்கும் உள்ள உறவுகளை விளக்கும் பொதுச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டுரையில், இந்தச் சொல்லின் பயன்பாட்டிற்கு Yogendra K. Malik பதிப்பித்த Politics and the Novel in India என்ற நூல் மிகவும் பயன்பட்டுள்ளது.

2. மொழி அரசியலை நாம் சாதாரண மொழிப் பயன்பாட்டில் நாள்தோறும் நடைமுறையில் காணமுடியும். கீழே தரப்பட்டுள்ள மூன்று சொற்றொடர்களின் மொழி அரசியல் வெளிப்படையானது.

அ) இவர் ஒரு இந்தியர் ஆனால் ஒழுக்கமானவர்
ஆ) இவர் ஒரு இந்தியர் எனவே ஒழுக்கமானவர்
இ) இவர் ஒரு இந்தியர் ஒழுக்கமானவர்

3) தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் மற்றும் மக்கள் எழுச்சி பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் எல்லாம், நாசுக்காகத் தாக்குவதற்கான முறைபோலக் கேள்வி எழுப்பி, அப்படியே விட்டுவிட்டுச் செல்லும் ஒரு மொழியமைப்பை நாவல் முழுக்கக் கையாண்டுள்ளார் ராஜம் கிருஷ்ணன்.

4) சமகால அரசியலுக்கு எதிர்வினையாக யமுனாவைப் படைத்திருப்பதாக முன்னுரையில் கூறும் ராஜம் கிருஷ்ணன், 'உயர்பண்பு, கற்பு, பெண்' என்ற முச்சேர்க்கை, அரசியலுக்கும் பதவிகளுக்கும் அப்பாற்பட்டே நிற்கும் என்று கூறும் கருத்துநிலை எதைக் கூறுகிறது என்பது புதிரான ஒன்றல்ல. தாங்கள்ஆதிக்கம் செய்யமுடியாத காலம் ஏற்படும்போதெல்லாம், அது ஒழுக்கம் கெட்டுவிட்ட காலம், நல்லோர்க்கு ஏற்ற காலமல்ல என்றெல்லாம் கூப்பாடு போடுவதுதான் மேட்டிமை அரசியலாகும்.

5) தொடர்பே இல்லாமல் நிகழ்ச்சிகளைத் தொடுத்து முன்பின்னாகக் காட்டுவது என்பது ஒரு உத்தியே! வெண்மணி கூலிவிவசாயிகள் கொளுத்தப்பட்ட கொடுமையில் பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் நின்றது கம்யூனிஸ்ட் கட்சி; ஏதோ சுதிரன் என்ற நாசகாரக் கம்யூனிஸ்தான் வெண்மணிக் கொடுமைக்குக் காரணமானதைப் போல ஒரு தோற்றத்தைத் தன் மொழியால் உருவாக்குகிறார் ராஜம்!

6) 'காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாத மக்களுக்குச் செய்தது என்ன?' என்ற நூலில் (1945) அம்பேத்கர். 'காந்தியின் தொண்டு' பற்றி விரிவாக விளக்கியுள்ளார்.

7) ராஜம் கிருஷ்ணன் பற்றி இப்படி ஒரு முடிவுக்கு வரும்போது, 1982இலேயே அவரைப் பற்றி உயர்வாக எழுதிய இந்தக் கட்டுரையாளரின் மனம் மிகவும் வருந்துகிறது. ஆனால் ஆராய்ச்சி என்பது தனிமனிதர்களின் அன்பு, பாசம், விருப்பு, வெறுப்புக்கு அப்பாற்பட்டது.

நூலடைவு

1. சுந்தரம், இராம. 1969
"இன்றைய தமிழ் இலக்கியப் போக்கு", ஆராய்ச்சி (தொகுதி1, மலர்1, இதழ்1)

2) முகிலன், க. (மொ.பெ.) 1992
டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு (தனஞ்செய் கீர்)
சென்னை: மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

3) மூர்த்தி. து. 2002
"தொடக்கக் கல்வியில் தாய்மொழிப் பயிற்சி", தமிழியல் ஆராய்ச்சி (தொகுதி 1)
சென்னை: புலமை மன்றம்.

4) ராஜம் கிருஷ்ணன், 1989
"வேருக்கு நீர்"
சென்னை: தாகம் (முதற்பதிப்பு 1972)

பாற்கர சேதுபதி நான்மணிமாலை

வெண்பா

> "மன்னியசீர்ப் பாற்கரனா மாராசற் கோர்மாலை
> துன்னியிடு நான்மணியாய்ச் சூட்டுவிக்க - வென்னுளமேற்
> கோலைத் திரத்தான் குருமுன் னுதித்தமத
> மாவத் திரத்தான் வரும். [1]

செந்தமிழ் வளர்த்த சேதுபதிகள் புகழை மண்ணுலகில் நிலைபெறச் செய்தவர்கள் பாற்கர சேதுபதியும் பாண்டித்துரைத்தேவருமே ஆவர். செயற்கரும் செயல்களைச் செய்து நிலையற்றஇவ்வாழ்வை நிலை பேறுடையதாகச் செய்பவர்கள், தாம் மாய்ந்தாலும் தம் புகழை நிலை நிறுத்தியவர் ஆவார். நம் பாட்டுடைத் தலைவராகிய பாற்கர சேதுபதி தம் புகழ் நிறுவி தாம் மறைந்த சீலர். அதனால் சீவசம்புப்புலவர் மன்னியசீர் பாற்கரன் என்று நூலுக்குத் தோற்றுவாய் செய்கிறார். பாற்கரவேள்இந்நில உலகில் சேதுநாடு என்னும் ஒரு சிறு பகுதிக்கே அரசராவார். ஆனால் அச்சமின்மை, எண்ணியது முடித்தல் என்னும் திண்மை, காலங்களை வென்று நிற்கக்கூடிய அருஞ்செயல்களைச் செய்து புகழ் நிலைபெறச் செய்தல், கேடும் பெருக்கமும் இல்லல்ல என்பதால் மெய்ப்பொருளில் உறுதி யெய்தல் ஆகிய குணங்களால் பாற்கரசேதுபதி மற்றைய மாந்தர் குழுவிலிருந்து உயர்ந்து நிற்கிறார். அரச குடும்பத்தில் பிறந்த இவர் ஐந்தவித்து அறநெறி நின்ற ஒழுக்கமுடையவர்; பொறிவாயில் ஐந்தவித்தல் இறைப்பண்பாகும். இப்பெரியார் இளமையிலேயே பொறிவாயில் ஐந்தவித்த பொய் தீர் ஒழுக்க நெறியில் நின்ற சான்றோர்; கேடும் பெருக்கமும் இல்லல்ல என்பதை உணர்ந்த தவ நெறியாளர். அதனால் அரசச் செல்வத்தைக் கொண்டு விழுமிய செயல்களைச் செய்து செல்வம் குறைந்த நிலையில் துறவியைப் போல வாழ்ந்த அரசமுனி. தமிழக வரலாற்றில் தமிழ்மொழிக் காவலராகத். தமிழ்ச் சங்கம் தோற்றுவித்த தமிழர் இவர்; வாழ்வியல் தமிழ் மரபு சிதையாமல் அரும்செயல்புரிந்த ஆற்றல் மறவர் இவர். அந்நியர்கள் தமிழ்ச்செவ்வி

அறியாதார் தமிழைப் புறக்கணித்த காலத்தில் தமிழ்ப்பாதுகாப்பு முயற்சிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்தியதோடு அதற்கொரு நிறுவனத்தையும் நிலைநிறுத்தியவர் பாற்கரசேதுபதி. வரலாற்றுக் களங்களில் போரும் பூசலுமே அரசர் பெயர்களைப் பதிந்து வைத்துள்ளன. பாற்கர சேதுபதியின் பெயர் வரலாற்றில் நிலையான இடம் பெற்றது தமிழனுடைய அடையாளமாகிய அறிவுக்களத்தைத் தாங்கி நிற்கக்கூடிய நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்துத் தமிழ்த் தொடர் முயற்சி மேற்கொண்ட அருஞ்செயல் ஆகும். அதனால் பாற்கரசேதுபதி தமிழ் வரலாற்றில் மாபெரும் தலைவனாக அறிஞர்களால் போற்றப்படுபவர். அத்தகைய அரசர்க்கரசராகிய பாற்கரருக்குச் சிவசம்புப் புலவர் என்றும் அழியாத நான்மணிமாலை சூட்டுவேன் என்று பெருமிதம் கொள்கிறார். இதனை,

"மன்னியசீர்ப் பாற்கரனா மாராசற் கோர் மாலை
துன்னியிடு நான்மணியாய்ச் சூட்டுவிக்க - வென்னுளமேற்"

என விளம்புகின்றார். கோவணத்தை அணிந்து கல்லால் நிழற்கீழ் குருவாய் இருந்து நால்வர்க்கு மெய்ப்பொருள் அருளியவனின் மூத்தகுமரன் ஆனை முகத்தனுமாகிய கணபதி என் உள்ளத்திருந்து இந்நான்மணி மாலையை அருள் விளங்கச் செய்வான் எனக் குறிப்பிடுகிறார்.

(2) காப்பு

பாலப் பருவமுதற் பட்டவற்றி லெல்லாமுற்
சாலப் பரிவினெனைத் தாங்கிநின்ற - வேலப்ப
ணார்த்தியினார் நெஞ்சகலா வாறுமுகத் தேவேயிவ்
வார்த்திகுறா ளுந்தாங்கு வான்." (2)

தமிழ் முழுதும் அறிந்த சிவசம்புப் புலவர் இறைவன் திருவருள்ப்பேற்றைத் தாம் சின்னஞ்சிறு வயது முதல் அனுபவித்த பெற்றி உரைக்கின்றார். சிறுவயது முதற்கொண்டு இறைவனுடைய திருவருள் இரக்கத்தைத் தன்னுடைய வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கண்டு கண்டு திருவருள் அனுபவம் பெற்றவர் இந்நூலாசிரியர். இறைவன் சான்றோர்கள் இடத்தில் மிக்க அன்பும்

கருணையும் உடையவன். நம் சிவசம்புப் புலவரும் மிக உயர்ந்த பக்குவ வாழ்வினர். இவருக்கு ஏற்பட்ட சிறுசிறு இடையூறுகளையும் துன்பங்களையும் இறைவன் தாயினும் சாலப் பரிந்து தாங்கி நின்றான். இதனை ஆசிரியர்

"பாலப் பருவமுதற் பட்டவற்றி லெல்லாமுற்
சாலப் பரிவினைத் தாங்கிநின்ற – வேலப்ப,"

என இறைவனுடைய திருவருள்ப் பேற்றை எடுத்துரைக்கிறார். முன் என்னை சிறு வயது முதல் அன்பினால் காத்து, அளித்து என் நெஞ்சிடம் பிடித்துக் கொண்ட ஆறுமுகக் கடவுளே, இன் நான் மணிமாலையை நாள்தோறும் கற்பவர் நெஞ்சில் அகலாதிருந்து அன்பும் அருளும் பாலிப்பான் என இந்நூல் கற்பாருக்குப் பயன் கூறுகின்றார். இந்நூலாசிரியர் சிவசம்புப்புலவர் மிகஉயர்ந்த அருட்செல்வர் ஆவார். தாம் பெற்ற பெருவளம் மற்றவர்களும் பெறவேண்டும் என்பதனால் முருகனிடம் தான் சிறுவயது முதல் அனுபவித்த அருள் இன்பத்தை மற்றவர்களும் பெறுதல் வேண்டி ஆர்வம் மிக்க அன்புடன் அகப்பூசை செய்யுமாறு எடுத்துரைக்கிறார். ஆர்வமும் இடையீடுமின்றி அன்பு பாராட்டுபவர்களுடைய உள்ளமாகிய தாமரை மலரின் கண் நீங்காது இருந்து அருள்புரிபவன் ஆறுமுகக் கடவுளாகிய முருகன் என்பதனை **"ஆர்த்தியினார் நெஞ்சகலா ஆறுமுகத்தேவு"** எனக் கற்போர்க்கு அன்பர்களுடைய பக்திச் சிறப்பையும் ஆறுமுகக் கடவுளின் அருட்சிறப்பையும் அறிவுறுத்துகிறார். முருகவேளினுடைய அருள்த்திறத்தை முதன்முதல் வலியுறுத்திய சங்கச் சான்றோர் திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரரே ஆவார். அவர் அடியார் சிறப்பையும் முருகவேள் சிறப்பையும் கூறும் போது,

"நலம்புரி கொள்கைப் புலம் பிரிந் துறையும்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுட
ன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
வின்னே பெறுதிநீ முன்னிய வினையே" எனப் போற்றுகிறார்.

நக்கீரர் "நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப" எனக்கூறும் பொருள் பொதிந்த வாசகத்தை நம் சிவசம்புப் புலவர் 'ஆர்த்தியினார் நெஞ்சகலா' என்னும் தொடரில் அமைத்திருப்பது கற்கும்தோறும்

தமிழின்பம் பயப்பதாகும். முன்னையோர் மொழிப் பொருளைப் பின்னவரும் போற்றும் வகையில் செய்யுளில் ஆசிரியர் சொல்லையும் பொருளையும் அமைத்து முருகவேளைப் புனைந்திருப்பது அரிய முயற்சி ஆகும். இன்றைய வழக்கில் சொன்னால் அற்புதம் அற்புதம் எனலாம்.

(3) நூல்

வெண்பா

> "திருமேவு மார்பினனோ சீரளகைக் கோனோ
> தருமேவு நாட்டரசன் றானோ – குருமேவு
> வேற்கரனைத் தாளிறைஞ்சி மெய்ப்பத்தி மேயபுகழ்ப்
> பாற்கரனாஞ் சேது பதி". (3)

சைவ சமயம் சிவனை முதன்மைப்படுத்தி சிவ வழிபாட்டைப் போற்றுவதாகும். பிற்காலத்தில் சிவனது தோற்றமாக முருகவேளை நூல்கள் முன்னிலைப்படுத்தின. திருப்பரங்குன்றம் திருச்செந்தூர், பழனி முதலான கோயில்களில் சிவனே மூலவர் ஆவார். முருகன் தலநாயகரே ஆவார். சிவனது சிறப்பை எல்லாம் முருகன் மேல் ஏற்றி சிவனது கூறாகவே முருகக் கடவுளைச் சைவ சமயம் போற்றத் தொடங்கியது. கல்லாலின் நிழற் கீழ் இருந்து உபதேசம் செய்ததனால் சிவன் 'குரு' என போற்றபடுவான். அத்தகு குருவுக்கும் குருவாக விளங்கியவன் முருகன் என முருகக் கடவுளுக்கு சைவ சமயம் ஏற்றம் கொடுத்தது அதனை ஆசிரியர் குருவும் விரும்பும் வேலாயுதப் பெருமான் என்பதை குருமேவு வேற்கரண் எனப் போற்றுகின்றார். அம்முருகக் கடவுளினுடைய திருவடித்தாமரையில் நெஞ்சம் பதித்தவர் பாற்கரசேதுபதி; இவருடைய பக்தி சடங்கும் ஆரவாரமும் நிறைந்த புறவழிபாட்டு நெறி அன்று; அது இறைவனுடைய திருவடியைப்பல பிறவிகளில் வழிபட்ட பக்தியினால் விளைந்ததாகும். அதனை ஆசிரியர் தாள் இறைஞ்சிப் பெற்ற மெய்ப்பத்தி எனக் குறிப்பிடுகிறார். யான் எனது என்னும் அகந்தை அழிந்த நிலையில் இருள் மலம் நீங்கிய ஓர் உயிர் பெறுவது மெய்யுணர்வும் அதன் விளைவாகிய பக்தியும் ஆகும். இதனை ஆசிரியர் திருவள்ளுவர், "பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு" என்பார்.

அத்தகு மெய்ப்பத்தியால் உலகம் மதிக்கும்படியான புகழை ஈட்டியவர் பாற்கரசேதுபதி. உலகத்து அரசர்கள் எல்லாம் பொருளும் இன்பமும் பெருகப் பொருள் ஈட்டுவர். நம் பாற்கர சேதுபதி பொருளும் காமமும் கடந்த அருளுடைமை பெருகப் புகழ் ஈட்டியவர். இதனை ஆசிரியர்,

> "வேற்கரனைத் தாளிறைஞ்சி மெய்ப்பத்தி மேயபுகழ்ப்
> பாற்கரனாஞ் சேதுபதி"

என அவருடைய அருட்செல்வப்பேற்றைச் சிறப்புற எடுத்துரைக்கிறார். பாற்கர சேதுபதி மெய்ப்பொருள் உணர்ந்து உள்ளத்துறவு நெறிநிற்கும் அரசர். அரசர்கள் இத்தகைய உள்ளத் துறவுடையராக இருத்தல் அரிது. பொருளும் காமமும் மனிதனைச் சிறுமைப்படுத்தும்; மனிதன்அவற்றுக்கு ஏவல் செய்யாமல் அவை தனக்கு ஏவல் செய்யும்படி அவற்றை வென்று உயர்ந்து நிற்க வேண்டும். அவர்களே தெய்வ மானிடர் ஆவார்; அவர்களே புலவர் போற்றும் புகழுக்குரியவர். அவர்களை உலகவர் போற்றி வழிபடுவர். அத்தகைய புகழுக்குரியவர் பட்டியலில் நம் சேதுபதி இடம் பெறுகிறார். ஆழ்வார்களும் வேதங்களும் மெய்ப்பொருள் தேர்ந்து தெளிந்து போற்றிய கடவுளர் திருமால், குபேரன், இந்திரன் போன்றோர் அவர்களைப் போன்ற சீரும் சிறப்பும் உடையவர் நம் பாற்கர சேதுபதி. அதனால் இவரை மலர்மகள் விரும்பி உறையும் மார்பினனாகிய திருமாலோ என்றும், செல்வம் நிறைந்த அளகாபுரிக்கு அரசனாகிய குபேரனோ என்றும், கற்பக மரம் விளங்குகின்ற வானவர் நாட்டரசனாகிய இந்திரனோ என்றும் போற்றுகின்றார். திருமாலும் குபேரனும் இந்திரனும் பலகால் தவம் செய்து அவரவர் பதவிகளை அடைந்தனர். அவர்களுடைய பதவியும் பொருளும் நிரந்தரமானதன்று. நம் பாற்கரசேதுபதி பெற்ற அரச பதவியும் பொருளும் நிரந்தரமானதன்று. நம் பாற்கர சேதுபதி தனக்கென வாழாப் பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகை. அதனால் அவர்களினும் இவரே சிறந்து நிற்கிறார். தாம் வாழ்ந்த காலத்தில் தாம் மேற்கொண்டு நிறைவேற்றிய மக்கட்பணியும் தமிழ்ப்பணியும் இறைப்பணியும் பாற்கர சேதுபதியை இம்மண்ணில் நிலைபேறு உடையவராகச் செய்துள்ளது. திருமேவு மார்பினனோ சீர் அளகைக்கோனோ தருமேவு நாட்டரசன் தானோ என்பவற்றில் உள்ள ஓகாரம் எதிர்மறை பொருஉடையதாகக்

கொள்ளவேண்டும். அவர்களினும் மெய்ப்பத்தி உடைய புகழ் பாற்கரசேதுபதி தான் ஆற்றிய செயலால் ஓங்கி அமரவாழ்வுபெற்று நிற்கின்றார்.

(4) *கலித்துறை*

"பதியிற்சிறந்திடுந் தேவையை யின் புறப்பாலித்திடுந்
துதியிற் சிறந்தநம் பாற்கர சாமித் துரை வள்ளலால்
விதியிற் சிறந்த தருமமு மேதகு மெய்ச்சைவமு
மதியிற் சிறந்த தமிழும் பெரிது வளர்வனவே." (4)

"நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்பது சான்றோர் வாக்கு. அரசன் உயிர்க் குணங்களாகிய அறம், மெய்யுணர்வு, கலை, குறிக்கோள், நெறிநிற்றல் ஆகியவற்றை மக்கள் வாழ்க்கையில் மேலோங்கச் செய்வதே உயிர் தளிர்ப்பதற்குரிய அரசாட்சி ஆகும். உடம்பை வளர்க்கின்ற நெல்லும் நீருமே ஒரு நாட்டின் வளம் ஆகாது. அவற்றின் மூலமாக உயிர் தளிர்ப்பதற்குரிய அறமும் இன்பமும் அரசனால் போற்றப்பட வேண்டும். அத்தகு செயலாலேயே மனித வாழ்வு ஏற்றம் பெறும். நாடு புகழ்மிக்கு ஓங்கும். அதனை உள்ளத்தில் கொண்டே சங்கச் சான்றோர் மேற்குறித்த வாசகங்களைப் போற்றி உரைத்துள்ளனர் நம் பாற்கரசாமியும் தருமமும் மேதகு மெய்மையும் தமிழும் உயிர் வளர்க்கும் பாங்கினை அறிந்து போற்றுகின்றார். இராமநாதபுரம் சேதுபதி ஆட்சியில் இத்தகு நற்பேறுகளைப் பெற்று மற்றைய அரசியல் தலைநகரங்களை விட இந்நகரில் உயிராகிய பயிர் தளிர்க்க அரசியல் முறை பாதுகாக்கப்படுகின்றது எனச் சேதுபதியின் ஆட்சிச் சிறப்பை புகழ்கின்றார். ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டினுடைய சட்டம் மதிக்கப்பட வேண்டும். மக்கள் விதிமுறைகளைப்போற்றி ஒழுகுபவராக விளங்கினால் அந்நாடு வளர்ச்சி அடையும். சட்டங்களை மதிக்காமல் மக்கள் செயல்பட்டால் சிறு குறும்பும் பாழ் செய்யும் உட்பகையும் பல் குழுவும் பெருக மக்கள் வாழ்க்கை அவலமும் அச்சமும் நிறைந்ததாகிவிடும். அதனால் ஆசிரியர் ஒருநாட்டின் விதிமுறைகள் போற்றப்பட வேண்டும். அதுபோற்றப்பட வேண்டுமானால் மக்கள் அற உணர்வும் ஒழுக்கமும் உடையவராக வாழ்தல் வேண்டும். அறத்திற்கும்

ஒழுக்கத்திற்கும் அடிப்படையானது அன்பு. அன்பின் அடிப்படையிலேயே தர்மம் நிலைபெறும். அதனால் நம் முன்னோர் தயாமூல தர்மம் என்பர். ஆகவே சட்டம் ஒழுங்கு நிலைபெற வேண்டுமானால் அவை சிறத்தற்குரிய தர்ம நோக்கு, அறநோக்கு. மக்களிடையே மேலோங்க வேண்டும். பாற்கரசேதுபதியின் ஆட்சியில் மக்கள் இயல்பாகவே அறத்தைப் போற்றுவதனால் அவனுடைய நாட்டில் 'விதியிற் சிறந்த தருமமும் பெரிது வளர்வனவே' எனப் போற்றுகிறார். மக்கள் வாழ்க்கை அறவாழ்க்கையாக அமைந்து ஒழுக்க நெறி நின்று இவ்வுலகியல் நடத்துவதன் நோக்கம் சிறந்தது பயிற்றல் என்பார் தொல்காப்பியர். செம்பொருள் காண்பது என்பார் திருவள்ளுவர். ஆசிரியர் மெய்ச்சைவம் காண்பது என மெய்ப்பொருள் காண்பதை குறிப்பிடுவர். மெய்யுணர்வு பெறுவது துன்பம் நீங்கிய இன்பப்பேற்றை நல்கும். எல்லா உயிர்களும் துன்பத்தை வெறுக்கின்றன. இன்பத்தை நாடுகின்றன. மெய்யுணர்வு உடையோரே துன்பத்தைத் தவிர்த்து பேரின்பம் பெறுகின்றார். அத்தகு பேரின்பத்தை தக்கவைத்துக் கொள்ளக்கூடிய மெய்ப்பொருளை "மேதகு மெய்ச்சைவம்" என ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

தமிழ் முத்தமிழ் எனப்போற்றப் பெறும், கலையே தமிழ் என்னும் பொருளில் வழங்குவதை இயல், இசை நாடகம் என்ற சொற்களில் காணலாம். கலைகள் மக்களுடைய அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்த்துப் பொருளும் இன்பமும் நிறைந்ததாக மக்கள் வாழ்க்கையை ஒளி பெறச் செய்வது கலைக்குப் பெருமையாகும். மனிதனுடைய ஒழுக்கத்தையும் அறிவையும் கீழ்நிலைப்படுத்தி மனிதவாழ்வின் விழுமியங்களைச் சிதைப்பது அறிவற்ற சிறுமதிபடைத்தோர் செயலாகும். பாற்கரசேதுபதியின் ஆட்சியில் கலைஞர்களும் மேன்மக்களும் மக்கள் உயர்ந்தோங்கும் வண்ணம் கலைச் செல்வத்தைப் பேணி வளர்ப்பதால் "மதியில் சிறந்த தமிழும் பெரிதும் வளர் வனவே" எனப் பாற்கர சேதுபதியின் ஆட்சியில் அறமும் மெய்யுணர்வும் தமிழும் தமிழ்கலைச் செல்வமும் மக்கள் வாழ்வில் நீக்கமற நிறைந்து விளங்குகின்றது. அதனால் அவனுடைய ஆட்சியில் அவன் நாட்டு மக்கள் மகிழ்ந்து போற்றி அவனை வழிபடுகின்றனர். திருவுடை மன்னன் திருமாலே ஆவான். மக்களின் திருமிகச் செய்கின்ற நம் பாற்கரசேதுபதி, மக்களின் துதியில் சிறந்திருப்பது வியப்பன்று.

விருத்தம்

"வளந்திக ழிராம லிங்கமா விலாச
மாளிகை கண்டவான் புலவ
ருளந்திகழ் கனியி னுட்புகா வாங்ங
னுறைதரும் பாற்கர வுரவோன்
றளந்திகழ் கமலத் துணைக்கண்கண் டிவன்வா
சவனல னாகவன் சுதன்மை
யளந்திகழ் நூலை யளக்கரி னடைந்த
தார்தவ மென்னவாய் வரிரே." (5)

சேதுநாடு புண்ணிய பூமி சேது முதல் இமயம் வரை உள்ள மக்கள் சேது தீர்த்தத்தில் நீராடுவதை வாழ்க்கைப் பேறுகளில் மிக உயர்ந்ததாகப் போற்றுகின்றனர். சேதுநாட்டு அரச குடும்பத்தினர் சேதுபதிகள் ஆவார். அச்சேதுக்கரை இராமனால் விளக்கம் பெறுவது; ராமன் புண்ணிய மூர்த்தி நடையில் உயர்ந்து விளங்கியவன். இராமன் அரக்கரை அழித்த பாவம் தீர இராமேச்சுரத்தில் சிவலிங்கத்தை எழுந்தருளச் செய்து வழிபாடு செய்தான்; அதனால் அவ்வூர் இராமேச்சுரம் என்றும் அவன் வழிபட்ட லிங்கம் இராமலிங்கம் என்றும் புகழ்பெற்றது. இராமன் தன்னடைந்தாரை எல்லாம் தன்னின் வேறாகக் கருதாது தன்உடன் பிறப்பாகவே போற்றியவன். வேடனாகிய குகனையும் குரங்கினத்து அரசனாகிய சுக்ரீவனையும் அரக்கர்கோனாகிய சிரஞ்சீவி வீடணனையும் தன்னில் வேறாக கருதாதவன். அவனுடைய வாஞ்சையும் நட்பும் அன்பும் நினைக்கும் தோறும் மனத்துக்கு இன்பம் தரும். அத்தகு இராமன்சூரிய குலத்து அரசன்.அவனுடைய சேதுக்கரையையும் சேது நாட்டையும் பாதுகாக்கின்ற சேதுபதிகள் தங்களையும் சூரியகுலத்தவர் என்றேபோற்றினர். தங்களை சேதுரகுநாத சேதுபதி என்று பெருமையோடு அழைத்தனர். இராமநாமம் சிவனோடு ஒன்றறக்

கலந்து இராமலிங்கமாக வழிபடுவதை அவர்கள் விரும்பிப் போற்றினர். இராமலிங்கம் என்ற திருப்பெயர் அவர்களுக்கு இன்பப் பேறாகும். அதனால் தங்களுடைய மாளிகையை இராமலிங்க விலாசம் எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர். இராமலிங்க விலாசத்தில் புகழ்பூத்த அரச பரம்பரையினர் வள்ளன்மையோடு புலவர்களையும் கலைஞர்களையும் போற்றிப் புரந்தனர். இராமலிங்க விலாசம் என்றபெயர் மாத்திரமே புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் உள்ளத்தில் களிபேர் உவகை கொள்ளச் செய்தது. மாளிகையை கண்டவர்கள் உள்ளே புகுதலும் செல்வம் பெற்றுவளந்திகழ வாழுதலும் உறுதியாகும். அரசன் இல்லையெனாது கொடுக்கும் இயல்புடையவன் இவன் கலைநுட்பம் தேர்ந்த கலைஞன்; உறுதிப்பொருள் தேர்ந்த ஞானி; அவன் இராமலிங்க விலாசத்தில் என்றும் இருந்து தாமரைக் கண்களால் அருள்பாலிப்பது. திருமகள் கேள்வன் தன் அடியவர்கள் மீதுள்ள அன்பின் காரணமாக கண்கள் சிவந்து கமலக்கண்ணனாக விளங்குவது போல் உள்ளது. இவனுடைய தோற்றம் சான்றோர்க்கு வானவர்நாட்டு அரசன் பூலோகத்தில் தோன்றி இச்சேதுநாட்டை அரசு செய்வது போல் உள்ளது. இது யார் செய்த தவம் என்று பலகால் புலவர்களைச் சிந்திக்க வைக்கின்றது. மக்கள் செய்த தவமாகுமா? புலவர்களும் கலைஞர்களும் செய்த தவமாகுமா? இச்சேது நாடு செய்த தவமாகுமா? அன்றி இச்சேதுபதி அரச குடும்பத்தினர் செய்த தவமாகுமா? யார் செய்த தவமாகும் என்று இராமலிங்க விலாசம் மாளிகைகண்ட உயர்புலவர் அனைவரும் பாற்கர சேதுபதியின் புகழ் நலத்தைப் போற்றுவர். முயற்சியாளர்களும் நன்மக்களும் இருக்கும் இடம் அவர் தம் செயலால் புகழ்பெறும். எங்கே நல்லவர்கள் இருக்கிறார்களோ அந்த மண்புகழ் சிறக்கிறது. அதனால் ஔவையார் முயற்சியாளர்களை வாழ்த்துவதற்கு அவர்கள் புகழ் தாங்கி நிற்கும் மண்ணை வாழ்த்துவார். எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை, வாழிய நிலனே என மண் வாழ்த்துப் பெறுகிறது. எந்த மண்ணில் சான்றாண்மையும் கலையும் கல்வியும் அறிவும் ஆற்றலும் சிறந்து மக்கள் வாழ்வு வளம் பெறுகிறதோ அந்த நாடு அமரர் வாழும் நாடாக கருதப்படும். அத்தகு மாட்சிமைமிக்க நல்லரசை மண்ணில் நிலைநிறுத்தியவன் பாற்கர உரவோன் என ஆசிரியர் போற்றுகின்றார். உரம் என்பது தமிழில் பல உயர்ந்த பொருள் குறித்த சொல்லாகும். திருவள்ளுவர் துறவிகளை உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் என்றும் அரசர்களை உரம் ஒருவர்க்கு உள்ள வெறுக்கை என்றும் குறிப்பிடுவார். நம் பாற்கர சேதுபதி அரசர்க்குரிய வெறுக்கையும் துறவிகளுக்குரிய உரமும் உடையவராகையினாலே பாற்கர உரவோன் எனப் பொருள் பொதிந்த சொல்லால் சேதுபதியின் அரச வாழ்வையும் உள்ளத்துறவையும் ஒருசேரக் கற்பாருக்கு இலக்கியச் சுவைப்பட எடுத்துக் காட்டுகிறார்.

(தொடரும்)

2007 செப்டம்பர் திங்களில்

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின்
நூற்றாண்டு விழா நடைபெறும்.

தொடர்பு முகவரி

பதிப்பாசிரியர்,
இரா. சதாசிவம்
செந்தமிழ்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-2532879

இல்ல முகவரி

இரா. சதாசிவம்
2/404, மருதுபாண்டியர் தெரு,
வட்டாட்சியர் நகர்,
மதுரை–20.

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம்,
2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.

ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434 - 32484

பதிப்பாசிரியர்

பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்

ஆசிரியர் குழு

முனைவர் திரு. தமிழண்ணல்

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

டாக்டர் திரு. ந. சேதுராமன்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. ம.ரா.போ. குருசாமி

முனைவர் திரு. அ.அ.மணவாளன்

முனைவர் கதிர் மகாதேவன்

முனைவர் நா. பாலுசாமி

முனைவர் பெ. சுயம்பு

முனைவர் திரு. அ. தட்சிணாமூர்த்தி

இராசா திரு. முருகதாஸ் தீர்த்தபதி

முனைவர் திரு. செ. கந்தசாமி

முனைவர் திரு. க. சின்னப்பா

அனுப்புநர்,

செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,